Edited by the Swami Valjinayakam.

# THF VIVEKABHANU

# விவேகபாநு.

மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"—திருச்குறள்.

வால்யூம் I] ஜூன் மீ [புத்தகம் 10

## HAPPINESS.

## ஆனந்தம்.

இவ்வுலகின்கண் தோன்றுகின்ற மானிடப் பிறவியில் சுகத்தையடையப்பலவி தத்திலு முயற்சியாதவர் எவருமிலர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி யன்றோ? ஆனால் அவர்களிற் பெரும்பாலார் உண்மையான ஆனந்த மின்ன தென்றறியத் தமது பகுத்தறிவை யுபயோகப்படுத்தாது இந்திரியங்களின் ஏமாற்றுக்குட்பட்டு அநித்தியமான இவ்வுலக வின்பத்தை நாடித் துன்பத்தை யடைகின்றார்கள். ஆனந்தம் மூன்று வகை யெனச் சுருதிகள் கூறுகின்றன. அவையாவன—அதமம், மத்திமம், உத்தமம்.

அதமானந்த மென்பது யாதெனின், இவ்வுலகத்திற் செவிகளால் வீணை முதலான வாத்தியங்களைக் கேட்பதினாலும், கண்களால் விநோதமான ரூபங்களைப் பார்ப்பதினாலும், மூக்கினால் புஷ்பங்களின் வாசனைகளை முகர்தலினாலும், நாவினால் உணவுகளின் இனிய சுவையை யறிதலினாலும், தேகத்திற் சந்தன முதலியவைகளைப் பூசிப்பரிமளிக்கச் செய்வதினாலும், பின்னும் தன, கனக, வஸ்து, வாகன, புத்திர, மித்திர, களத்திராதிகளோடுகூடி யிருப்பதினாலும் உண்டாகா நின்ற ஆனந்தமாம். இதனையே சுருதிகள் மனுஷ்யானந்தமெனக் கூறுகின்றன. அநேகராலும் விரும்பப்பட்ட இவ்வானந்தத்தை அதம மென்று சொல்வ தென்னையெனில், அதற்குப் பலகாரணங்கள் இருக்கின்றன. அவற்றுட் சிலவற்றை அடியிற் கூறுகின்றோம்.

மேற் கூறிய மனுஷ்ய யானந்தம் ஸ்திரமாயிருப்ப தொன்றல்ல. என்னெனில், வீணை முதலிய வாத்தியங்களைக் கேட்கும் வரையும், விநோதக் காட்சிகளைப் பார்க்கும் வரையும், வாசனைகளை முகரும் வரையும், உணவுகளை நாவில் வைத்திருக்கும் வரையும், சந்தனமுதலியவற்றைத் தேகத்திற் பூசியிருக்கும் வரையும், தன, கனக, வஸ்து, வாகன, புத்திர, மித்திர, களத்திராதிகளுக்கு நாசம் நேரிடும் வரையும் மாத்திரம் அவ்வானந்த மடையப்படுகின்றதே தவிர அது நீடித்திருப்பதாய் காண்கின்றோ மில்லை. மேலும், இத்தகைய சுகங்களை அனுபவிக்குங் காலத்திலேயே அவைகட்கு ஹேதுவாயிருந்த பொருள்

கள்காரணமாக நேரிடுந் துக்கத்தால் அவ்வற்பச் சுகமும் இல்லாதே போகின்றது. இவ் விஷயசுகம் யாவர்க்கும் சமமாயிருக்கின்றதெனக் கூறலாமோ வெனின் அங்ஙனங்கூறவும் ஏதுவில்லை. ஏனெனில் ஒருவனுக்குச் சுகமாயிருக்கும் ஆகாராதி வஸ்துக்கள் மற்றொருவனுக்குச் சுகமாயிருக்கிறதில்லை. சொற்பகாலமே அனுபவிக்கப் படுகின்ற இவ்வற்பச் சுகமும் துக்க சம்பந்த மில்லாமலிருக்க வில்லை. உதாரணமாக:— ஒருவன் அரசனாயிருந்து சகல பாக்கியங்களையும் அனுபவிக்குங் காலத்திலேயே, தனது வம்ச விர்த்திக்குச் சந்ததியில்லை யென்று விசனிக்கிறான்; நித்திய தரித்திரனாயிருக்கின்ற ஒருவன் புத்திர பாக்கியத்தைப் பெற்றோம் என்று சந்தோஷிக்குங் காலத்திலேயே அப்புத்திரர்களை ஸம்ரக்ஷணை செய்யத் திரவிய மில்லை யென்று விசனிக்கிறான். சகல சம்பத்துமுள்ள ஒருவன் அவைகளை யுடைத்தா யிருப்பதற்காகச் சந்தோஷிக்கும் பொழுதே அவைகளை யனுபவிக்கக் கூடாதவிதத்தில் ரோகத்தால் பீடிக்கப் பட்டிருப்பதற்காக வருந்துகிறான். இவ்விதமாக எவரும் அல்பற்பச் சுகத்தை துக்க சம்பந்தமில்லாது அனுபவிக்கின்றாரில்லை. ஆதலின் பலரால் விரும்பப் பட்டாலும் விஷயசுகம் அதமமானதே. அறியாமையினால்தான் ஜனங்கள் அதை உத்தம மென நாடிச் செல்கின்றனர். வாஸ்தவத்தில் அதனைச் சுகமென்றே சொல்லற் கிடமில்லை. ஏனெனில் அரசனாயிருப்பதுதான் சுகமென்றால் அவனுக்கும் சுகத்தைக் காணோம்; பலவிதமான துக்கங்கள் தாமிருக்கின்றன.

இனி மத்திமானந்த மென்பது யாதெனின், இவ்வுலகத்தில் வேதாகமங்களிற் கூறியவண்ணம் கருமங்களைச் செய்வதாலும், தருமசாலை, பாடசாலை, முதலானவைகளைக் கட்டுதலினாலும், நற்குணங்களையே கைக்கொண்டு ஒழுகுவதினாலும் சுவர்க்கலோகத்திற் சென்று ஆங்கு அனுபவியா நின்ற ஆனந்தமாம். இதனையே சுருதிகள் தேவானந்த மெனக் கூறுகின்றன. அதிகத் துக்கசம்பந்தமில்லாதிருந்தினும் இது என்றும் நிலையுள்ளதன்று. ஏனெனில், இவ்வானந்தம் கருமங்களின் பலியிகுதியா லடையப்படுகின்றது. பலிமை குறைந்தவுடன் இவ்வானந்தமும் நழுவி விடுகிறது. மனிதர்கள் உலக இன்பங்களை வெறுப்பதற்கும் அவருடைய ஹிருதயத்தை ஒருவாறு சுத்தப்படுத்துவதற்கும் இது காரணமா யிருத்தல்பற்றி இதனை மத்திமானந்த மெனக் கூறினார் மேலோர்.

உத்தமானந்தம் என்பது யாதெனின், துக்கரூப சம்சார சாகரத்திலிருந்தும், இவ்வுலகத்திலோ, மற்ற உலகத்திலோ இறத்த லென்னும் துன்பத்தி னின்றும் விடுபடுதல் அல்லது கரையேறுதலால் விளையும் ஆனந்தமாம். இதனையே சுருதிகள் பிரம்மானந்த மெனக் கூறுகின்றன. சாதாரணமாக ஜனங்கள் கூறும் மோக்ஷமென்பதும் இதுதான். தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியானது முதல் வெளியில் வந்துதிக்கும் நிமிஷம் வரைக்கும், பின்னர் பிறந்தது முதல் இறக்கும் நிமிஷம் வரைக்கும் மனிதன் துக்க சாகரத்திற் கிடந்துழலுகிறான். அவனுக்கு எதார்த்தத்தில் ஆனந்தமென்பதே கிடையாது. மோக்ஷமென்பதோ முடிவில்லாத ஆனந்தமா யிருக்கின்றது. ஆதலின் யாவரும் இந்நித்தியானந்தத்தை யன்றோ நாடவேண்டியது?

சகோதரர்களே! அத்தகைய மேலான ஆனந்தத்தை யடைவதற்குப் பிரயத்தனப் பட வேண்டியதாயிருக்க, அதைவிட்டு மின்போன்று நிலையற்ற உலகவின்பங்களை யடைவதற்காக நாம் பிரயாசைப்படுவது என்ன மதியீனம்! அதற்கு வேண்டு முயற்சி செய்வோமாயின் இம்மையிலோ உம்மையிலோ அதை யடைவோ மென்பதிற் சந்தேகமேயில்லை.

ஆதலின் நாம் ஒவ்வொருவரும் இதுவரைநாளை வீணுளாக்காது அதற்குரிய மார்க்கங்களில் அவரவர்க்கேற்ற ஒன்றைப் பின்பற்றி தத்தம்கடமையைச் சித்தமுடன் செய்து ஒப்புவமையில்லாத பிரம்மானந்தத்தை யடைய முயற்சிப்போமாக.

எம். கிருஷ்ணசுவாமிமுதலியார்.

# SREE BHAGAVAT GITA KUMMI.

# ஸ்ரீ பகவத் கீதைக் கும்மி

## தெய்வவணக்கமும் நூற்பெயரும்.

1 பூவுல குள்ளிட்ட அண்டப் பரப்பெலாம்
பூக்கலும் காக்கலும் போக்கலு மே
ஓவ லிலாவினை யாடல்க ளாவுள
ஓர்பொருள் நீங்கா துளத்துவைத்தே.

2 அப்பொரு ளேமுனென் கண்ண பிரானுய்
அருச்சுன னுக்குப தேசம் செய்த
மெய்ப்பொரு ளாம்பக வத்கீதை தன்னை
வியன்கும்மி யாக விளம்பிடுவோம்.

(இதன் பொருள்) இந்தப்பூமி அடங்கிய அண்டம் உள்பட உள்ள எண்ணிறந்த சகல அண்டங்களையும் ஆக்கலும் காக்கலும் போக்கலுமே நீங்காத திருவிளையாட்டாக உள்ள ஏகபராபர வஸ்துவை எப்பொழுதும் நீங்காமல் மனத்திலே இருத்தி, அந்த வஸ்துவே முன்காலத்தில் கண்ணபிரான் வடிவமாகத்தோன்றி அருச்சுனனுக்கு உபதேசித்த உண்மைப் பொருளாகிய பகவத் கீதையைக் கும்மியாகக் கூறுவோம்.

குறிப்பு:—கொம்மை என்றபதம் மருவிக் கும்மி என்று வழங்கு கின்றது. பூக்கல்—உண்டாக்கல்; ஓவல்—நீக்கல்; உளம்—மனம்; வியன்—பெருமை (பொருந்திய)

## நூற்பெருமை.

3 ஈசனே ஆசானுய்ப் பத்தர்க்கு ஞானுப
தேசஞ்செய் உண்மை தெசகமுணர
ஈசனே கண்ணனுய்ப் பார்த்தனுக் கோதும்
இதன்தரம் யாவர் இயம்பவல்லார்.

(இ—ள்) ஈசுவரன் தானே குருவடிவு கொண்டு (பக்குவமடைந்த) பத்தருக்கு ஞானுபதேசம் செய்தருளும் உண்மையை உலகத்தார் அறியும்படி அவர் கண்ணபிரானுகி அருச்சுனனுக்கு உபதேசித்த பகவத்கீதையின் மகத்துவத்தைச் சொல்லவல்லவர்கள் ஒருவருமில்லை.

4 பரனே அருள்பர மார்த்தம் விபாக
பகவான் புகர்ந்தது பாஷியங்கள்

தருமவர் சங்கரா சாரியர் ராமாநு
சாசாரி யர்ம்த்வா சாரியரே.

(இ—ள்) தனக்கு மேலான பொருள் இல்லாத தென்று பொருள்படும் பரமார்த்தம் என்று பேர் பெற்ற பகவத் கீதையானது, ஈசுவரனாலேயே அருள் செய்யப் பெற்று, வேதவியாச முனீசுவரரால் பாரதத்தில் எடுத்துக் கூறப்பட்டு, சங்கரர் ராமானுசர் மத்துவர் என்ற திரிமதஸ்தாபனாசாரியர்கள் ஆகிய பெரியோர்களால் வியாக்கியானம் எழுதப்பெற்ற பெருஞ்சிறப்புடையது.

குறிப்பு:—பகவத் கீதைக்கு மேற்கூறிய பாஷியங்களே யல்லாமல் நீலகண்ட பாஷியமுதலிய வேறுபல பாஷியங்களும் இருக்கின்றன.

5 ஓரிடம் போலெங்கும் உள்ள பரம்பொருள்
ஒப்ப வடமொழி ஒன்றிலன்றிப்
பாரிடை யேபல பாஷையில் உண்டு
பரமார்த்தம் என்ற பரம் பொருளே.

(இ—ள்) ஓர் இடத்திற்போலப் பல இடங்களிலும் நிறைந்திருக்கின்ற பகவானாகிய பரம் பொருள் போலவே அப்பகவான் அருளிய பகவத்கீதையாகிய பரம்பொருளும் ஸமஸ்கிருத பாஷை ஒன்றில் இருப்பதல்லாமல் பூமியில் வழங்கும் பலபாஷைகளிலும் (மொழி பெயர்க்கப்பட்டு) உள்ளது.

## நூற்பயன்.

6 துக்கத்தை நீக்கும் சுகத்தினை ஆக்கும்
துகளினைப் போக்கும் தொழில்சொல் எண்ணம்
ஒக்கப் புனிதப் படுத்திடல் வாழ்வுய்த்
தொடுக்கத்து முத்தி உதவும் இதே.

(இ—ள்) இந்நூல், வாசிப்போர்க்குத் துக்கத்தை ஒழித்துச் சுகத்தையுண்டாக்கிக் குற்றத்தைப் போக்கி மனம் வாக்குக் காயம் என்ற மூன்று கரணங்களையும் ஒரு சேரப் பரிசுத்தப்படுத்தி மரணகாலத்தில முத்தியைக் கொடுக்கும்.

## நூலின் அவிரோத நிலைமை.

7 இந்நூல் சைவ விரோதம் இலாத
தெனச்சிவ ஞானயோ கீந்திரர்தாம்
முந்த உரைத்ததைச் சிந்தைசெய் தால்இது
எந்த மதத்திற்குஞ் சொந்தமதே.

(இ—ள்) இந்த நூல் சைவ சமயத்திற்கு விரோதமான தன்றென்று சிவஞான முனிவர் (சிவஞானபோதச் சிற்றுரையால்) கூறியிருப்பதைக் கவனித்தால் இது எல்லாச் சமயத்தாருக்கும் பொதுவான தென்பது விளங்கும்.

## அவையடக்கம்.

8 வாசகம் ஓசை குறைந்த துயர்பா
வருத்தம் அருத்தம் அறிதல் என்றிவ்
வோசைகுன் றெளி தாம்கும்மிப் பாவிலிஃ
தோதினன் யாரும் உணர்ந்திடவே.

(இ—ள்) இந்நூல் வசனத்திலும் உயர்ந்த விருத்தப்பாவிலும், மொழிபெயர்க்

கப்பட்டிருக்கிறது. வசனம் ஓசை குறைந்ததாக(வும் மனப்பாடமாகக் கூடாததாகவும்) இருப்பதாலும் உயர்தரமான விருத்தப்பா அருத்தம் பண்ணுவது கஷ்டமாக விருப்பதா லும் நான் இந்நூலை ஓசைக்குறைவு இல்லாததும் பொருள் இலகுவாக விளக்குகிறது மான கும்மிப்பாட்டிலே கற்றவர்போல மற்றவரும் தெரிந்துகொள்ளும்படி பாடினேன்

• இக்கும்மிப்பாட்டுக்கள் இலகுவானவைகளாலும் கூறும் விஷயம் தத்துவஞானமானதால் உரையெழுதுவ தவசிய மாயிற்று.

9 பூசிக்க ஈசனைப் போலொரு விக்ரகம்
பொற்பப் புரிகுதல் போலெவரும்
வாசிக்கக் கீதையை யான்கும்மிப் பாவில்
வகுத்தனன் வண்டமிழ் வாணர்களே.

(இ—ள்) தமிழ் வல்லோரே! நினைத்தற்கரிய ஈசுவரனை எளிதாகப் பூசித்து வணங்கும்படியாக அவரது பாவனா ரூபத்தை விக்கிரகமாக அமைத்தல் போல, பொருள் தேர்தற்கரிய வடமொழிக் கீதையை யாவரும் எளிதாக வாசித்துப் பொருளறிந்து கொள்ளும்படி தமிழிலே கும்மிப் பாட்டாகச் செய்தேன்.

10 கண்ணாலே காணொணான் யாரும் எளிதாகக்
கண்ணுறக் கண்ணனும் வண்ணம் உண
ரொண்ணாத கீதையும் யாரும் எளிதா
உணர்ந்திடக் கும்மியா உற்றதுவே

(இ—ள்) கண்ணாலே காணக் கூடாத அருபியாகிய பகவான், எல்லாரும் எளிதாகக் கண்டு தரிசிக்கும்படி கண்ணபிரானாக உருக்கொண்டது போல அறிதற் கருமையான பகவத்கீதையும் சகலரும்இலகுவாக அறியும்படி கும்மிப்பாட்டுக்களாகஅமைந்தது.

11 அண்டகோ டிக்குள அடங்காப் பொருள்என்
அகத்துள் அடங்கும் அதிசயம்போல்
அண்டர்கோன் சொன்னகீ தைப்பொருள் தானும்
அளியனேன் சொற்குள் அமைந்ததுவே.

(இ—ள்) பலகோடி அண்டங்களுக்குள்ளும் அடங்காது விரிந்த பரம்பொருளாகிய ஈசுவரன் என்னுடைய நெஞ்சாகிய சிறு வீட்டில் வீற்றிருக்க அமைந்த ஆச்சரியம்போல, அப்பகவான் அருளிய கீதையாகிய பரம் பொருளும் எனது கும்மியாகிய சிறு பாட்டில் அமைந்தது.

12 தக்கவர் யாரினும் தக்கோன்சொல் கீதையைச்
சற்றுந் தகாதேனோ சாற்றவல்லேன்
மிக்க அரியதை மிக்க எளிதால்
விளைத்தல் அவன்றன் விளையாட்டே.

(இ—ள்) எல்லாரினும் மிக்கோனாகிய கண்ணபிரான் அருளிய தத்துவஞான சாரமாகிய பரமார்த்தத்தை, அதனைக் கூறுவதற்குச் சிறிதும் தகுதியில்லாத நானோ, சொல்ல மாட்டுவேன். நான் சொல்லியது அவன் அருளாலன்றி வேறன்று

அரிய காரியங்கள் யாவற்றினும் அரிய காரியத்தை எளிய கருவிகள் எல்லாவற்றினும் எளிய கருவியால் முடித்தல் அவன் திருவிளையாட்டு

13 • துரும்பிற் சுரேசர் வலிகெட்ட தோஇளஞ்
சொற்பிள்ளைக் குப்பொன்னன் தோற்றதுபோ

பெரும்பித்த னென்பமார்த்தம் புகன்றிட்ட
வெற்றியோர் அற்புதம் கற்றவரே.

(இ—ள்) ஒரு சிறு துரும்பினும் தேவர் தலைவர்கள் பலந்தொலைந்தது ஆச்சரியமோ? மழலைச் சொல் மாறாத பிரகலாத னென்ற சிறுபிள்ளைக்கு இரணியன் தோற்றது ஆச்சரியமோ? பெண்தன்மை யுள்ளவனான பரமார்த்தமாகிய பகவத் கீதையைக் குப்பியாகக் கூறியது ஆச்சரியமோ? எது ஆச்சரிய மென்று கற்றோரே சொல்லுங்கள். தேவர் தலைவர்கள் துரும்பால் வலி யிழந்தது காஞ்சிப் புராணம் அமிர்தப் படலத்திற் கூறியிருக்கிறது.

14 இருஞால அல்போக்கும் தன்னொளி இவ்விளக்
கின் தீபம் ஏற்றலால் யாரகத்தும்
அஞ்ஞான அல்போக்கும் தன்ஞானம் இல்லா
அளியன்பாக் கீதை ஒளியுறலால்

(இ—ள்) சுயமான பிரகாசம் இல்லாதவிளக்கு இனிய தீபச்சுடர் ஏற்றப்பெறுதலினால் எல்லாருடைய வீட்டிலும் இந்தப்பூமியில் உள்ளதாகிய சாதாரண இருளை நீக்கும். (அதுபோல) சுயஞானம் இல்லாத எளியேனுடைய பாட்டும் பகவத் கீதையின் ஞானப்பிரகாசம் உறுதலால் எல்லாருடைய நெஞ்சிலும் அஞ்ஞான இருளை நீக்கும் யாரகத்தும் என்பதை உவமானத்தோடும் உவமேயத்தோடும் பொருத்திக்கொள்க.

அகத்தும் என்பது உவமானத்தில் வீட்டிலும் என்றும், உவமேயத்தில் நெஞ்சிலும் என்றும் பொருள் படுகின்றது

(இன்னும்வரும்)

V. P. சுப்பிரமணியமுதலியார்.

———:o:———

"கடவுளுக்கு உகந்தவழியில் ஒழுகுவதும் அவர் நியமித்த கட்டளைகளை ஒரே மனதுடன் செய்வதுந்தான் அவசியமானவை. அவற்றைச்செய்துமுடிக்க நமக்குச் சொற்பகாலந்தானிருக்கிறது. அதனால் இப்பொழுதே அவற்றைச்செய்வோமாக".

ஸ்டாப்போர்ட். எ. புரூக். (Stopford. A.Brooke).

***

"எதாயிருப்பினும் உண்மையறியவே வேண்டுமென்பதைத்தவிர மற்றெவ் விருப்பத்தையும் ஒருவன் விட்டொழிவானாயின், அவன் பயமும் துக்கமும் தாக்குதற்கு வலியற்ற ஓர் நிலையை அடைவான்".

ஜான் டப்ளியு. சாட்விக். (John. W. Chadwick).

***

"என் மனம் இவ்வுலகத்தைப்பற்றாமலும், ஒரு நிமிஷமேனும் அதில் அமைதிபெறாமலும் இருக்கின்றது. ஆனால் எனது சுடாவமுழுவதும் இனிமேலுள்ள அதிக மேன்மையான நிலைமையை நாடி அடக்கமுடியாத வேகத்தோடு ஓடுகிறது".

பிஷ்டே (Fichte).

# THE FORCE OF WORLDLY ATTACHMENT.

## ப்ரசபலம்.

இப்பரத கண்டத்தின் வடபாகத்திலுள்ள சிறு கிராமமொன்றில் ஒருவன் தன் வீட்டிற்குச் சமீபத்தில் மிட்டாய்க்கடை வைத்து ஜீவனம் செய்து கொண்டிருந்தான். அவ்வூர்ச் சிறுபிள்ளைகள் அவனிடத்திற் பலவித மிட்டாய் வாங்கிச் சாப்பிடுவது வழக்கமாயிருந்தது. அவ்வூரில் மற்ற கடைகளைவிட இந்தக் கடையில் மிகநேர்த்தியான தின்பண்டங்கள் இருந்ததினால் இவனுக்கு நல்ல லாபம் கிடைத்துவந்தது. ஐந்து வயதும் எட்டு வயதுமடைந்த இரண்டு மக்களுக்கும் மனைவிக்கும் தனக்கும் காலக்ஷேபத்திற்கு வேண்டியதுபோக மீந்தபணத்தை மிக ஒற்றுமையுடன்வாழ்ந்த தன்பத்தினிக்குங்கூடத் தெரிவிக்காமல் அப்போதைக் கப்போதே தன்படுக்கையறையிற் புதைத்து வைத்துக் கொண்டு வந்தான்.

அவன் ஒருநாட்பகல் பதினொரு மணிக்குத் தன் கடையிலிருந்து வியாபாரஞ் செய்து கொண்டிருக்கும் சமயத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவானது ஸ்நேகிதராகிய குசேலர் தானோ என்று சந்தேகிக்கும்படி பார்த்த விடமெல்லாம் பொத்தலாயிருந்த நெடுஞ்சட்டை யொன்றைத் தரித்தவரான ஓர் சந்நியாசி சூரிய வெப்பம் சகிக்க முடியாமல் நிழலுக்காக அவன் கடையில் ஒதுங்கினார். அங்குச் சற்றுதங்கி சிரமந்தீர்ந்த பிறகு தாக சாந்திக்காக முனிவர் குடிநீர் கேட்க, கடைக்காரன் தாம்பாளத்திற் சில தினுசு மிட்டாய்களையும் ஓர் பாத்திரத்தில் தண்ணீரையும் கொண்டுவந்து கொடுத்தான். யோகீசுவரர் அவைகளை யுட்கொண்டு இரவிலும் அவ்விடத்திலேயே தாமசித்தார். அப்பொழுது அவர் தரித்திருந்த வஸ்திரத்திலுள்ள பொள்ளல்கள் வழியாய்ச்செல்லும்கொசுக்களின் உபத்திரவம் சகிக்க முடியாதவராய், தம் சட்டையைத் தைத்துக் கொடுத்தால் மிக்க நலமாயிருக்கு மென்று கடைக்காரனை வேண்டிக்கொள்ள, சுபாவத்திலேயே நல்ல குணங்களுடைய *ஹல்வா வாலா மூன்று மணி நேரம் அதேவேலையாயிருந்து ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் சட்டை யென்று சொல்லத்தக்க வண்ணம் சீர்ப்படுத்திக்கொடுத்தான். அன்றிரவு யோகீசுவரரும் சுகமாக நித்திரை செய்தார். மறுநாட் காலையில் அச்சாது கடைக்காரனண்டை சென்றார் நண்பர்களே! அவர் யாசகத்தை உத்தேசித்துத்தான் சென்றாரோ வென்று நினையாதீர்கள். அவரோ தமக்கு நன்றிசெய்த கடைக்காரனுக்குப் பிரதியுபகாரஞ் செய்ய நினைத்துச் சென்றனர்.

தம்மைப்போல் அந்த கிரகஸ்தனையும் மண்ணாசை பெண்ணாசை பொன்னாசையாகிய மூவாசையையும் ஒழித்துவிட உபதேசிக்கக் கருணைகூர்ந்து அவ்வியாபாரியை நோக்கி "ஹே! நற்குணமமைந்த நண்பனே! உனதிச்சைப்பிரகாரம் சகல போகங்களையும் அநுபவிக்கக் கூடிய கோலோகத்திற்குச் செல்கின்றாயா? உன் பெண்டு பிள்ளைகளிடத்தில் உத்திரவு பெற்றுக்கொண்டு என்னுடன் கூட வருவாயாகில் உன்னை யொரு விமானத்திலேற்றி அவ்விடத்திற் கனுப்பிவிக்கிறேன்" என்று கூற, வியாபாரி சற்று யோஜித்து அந்த யோகியைப்பார்த்து "தம்மை அந்தரங்க பக்தியுடன் நேசித்துப் பூஜிக்கிறவர்களுக்கு மோக்ஷ சாம்பிராஜ்யத்தைக் கொடுக்கத் தயாராயிருக்கும் ஸ்ரீ இராதா ச்யாமாவின் பதவியையடைய விரும்பாதவர் யாவர்? உத்தமர்கள் அப்பதவியடையத் தங்கள் கீர்த்தி, பொருள் முதலியவற்றை வெறுத்துக் காடுகளிற் போய் அநேக

*மிட்டாய்க் கடைக்காரன்.

காலம் தயவுசெய்கிறீர்கள். உதாரகுணமுள்ள யோகீந்தரரே! தங்கள் கொடை ஒப்பற்றதா யிருக்கின்றது. தாங்கள் அறியாதது ஒன்றுமில்லை யாயினும் என்னுடைய தற்கால நிலைமையை ஒருவாறு சொல்லுகிறேன். இந்த விரண்டு பாலர்களையும் பரிபாலிக்க என்னைத்தவிர வேறொருவரு மில்லையாதலினால் நான் அவர்களை விட்டுவிட்டுவருவது அவர்களுக்கு மிகத்துக்ககரமா யிருக்கும் ஆகையால் அவர்கள் தங்கள் காலக்ஷேபத்திற்குத் தாங்களே சம்பாதித்துக் கொள்ளும் வயதடையுமளவும் அதாவது எட்டு வருஷம் வரையும் தயவுசெய்து பொருத்திருப்பீராகில் எனக்குப் பேருதவி செய்ததாகும்" என்றனன்.

இதைக் கேட்ட ஞானி கடைக்காரனுக்குக் கடவுளிடத்திலுள்ள அன்பையும் மோக்ஷத்திலுள்ள பிரியத்தையுங் காட்டிலும் தன் பிள்ளைகளிடத்திலிருக்கும் வாஞ்சை யதிக மென்பதுகண்டு அவன் மேல் இரக்கமுற்றவராய், அவன் வேண்டுகோளுக்கிணங்கி எட்டு வருஷம் கழிந்த பிறகு வருவதாகச் சொல்லிப் போயினர்.

சொன்ன சொற்படி எட்டாவது வருஷம் சென்றுவினவ, அவ்வியாபாரி முனிவரரை நோக்கி "சுவாமின்! என் தலையில் ஈசனெழுதியிருக்குங்கஷ்டத்தை யென்னென்றுரைப்பேன். என்னிரண்டு புத்திர சிகாமணிகளையும் பாருங்கள். அவர்கள் மிகக் கொடியர்களாய் விட்டார்கள். துஷ்ட சகவாசத்தினாலும் மதுபானத்தினாலும நான் சேர்த்து வைத்த பொருளை யெல்லாம் அழித்து விட்டார்கள். அவர்களை இல்வாழ்க்கையிலிருத்தினால் ஒருசமயம் புத்திவராதா வென்று ஆலோசித்து அவர்களுக்கு விவாகஞ் செய்விக்க எத்தனிக்கிறேன். அதற்காகப் பணம் சேகரித்தல் அவசியமாயிருப்பதாலும் விவாகமான பின்னரும் அவர்கள் செலவிற்குங் கஷ்டப்படாம லிருக்கக் கொஞ்சம் நிதி சேர்த்து வைக்கவேண்டிய திருப்பதாலும் தாங்கள் கிருபை கூர்ந்து இன்னுமோர் எட்டு வருஷம் பொறுக்கப் பிரார்த்திக்கிறேன்" என்று மொழிந்தனன்.

இவற்றை யெல்லாம் யதி பொறுமையுடன் செவியுற்று, கடைக்காரனுக்கு இன்னும் சம்சார பந்தங்கள் விடவில்லை யென்று நினைத்து மறு எட்டாவது வருஷம் வருவதாக உறுதிகூறிச் சென்றனர்.

அந்த எட்டு வருஷமும் ஒரு க்ஷணமாய்க் கழிய, ஞானியார் மறுபடியும் அந்த விடத்தில்வந்து பார்த்த பொழுது அந்தோ! என்ன ஆச்சரியம்!! முன்னிருந்த கடைக் குப்பதிலாய்த் தாழ்ந்த குடிசை யொன்றில் ஏழை ஜனங்களுக்காகச் சில்லறைச் சாமான்கள் வைத்திருக்கும் கடையையும் அதில் சுமார் இருபத்தைந்து வயதுள்ள ஒரு பாலியனையும் கண்ணுற்றார். அவனிடத்திற் பழைய பலகாரக் கடைக்காரனைப்பற்றி வினவ, அவன், தான் அக்கடைக்காரனது மூத்தமகனென்றும், அடுத்த வயலில் உழுதுகொண்டிருந்த ஒரு பாலியனைக் காண்பித்து அவன் தனது தம்பி யென்றும் துக்க சாகரத்தில் தத்தளிக்க விட்டுத் தங்கள் தகப்பன் மரித்து ஏழு வருஷ மாயிற்றென்றும் முன்னிருந்த கடை யெல்லாம் நசித்துப்போக அவ்வுபாயமான கடையைக் கொண்டுதான் காலக்ஷேபம் செய்வதாகவும் புகன்றனன்.

இம்மொழிகளை யெல்லாம் செவியுற்ற திரிகால ஞானியாகிய அம்மதிஞர் சற்று அகக்கண்ணால் நோக்கிய பொழுது ஹவ்டாவா என்பவன் எருதாக ஜனித்திருக்கிறானென்றும் அவ்வெருதும் இளைய மகன் ஏரிற்பூட்டி யுழுது கொண்டிருந்த எருதுகளி லொன்றென்றும் அறிந்தார். அப்போது அவ்வெருது உழுதுகொண் டிருந்தபடியால் உழவர்கள் இளைப்பாறும் பொருட்டும் எருதுகள் தீனந்தின்னும் பொருட்டும் வேலை யொழிந்திருக்கும் மதியம் வரையில் அவ்விடத்திலேயே காத்திருந்து, மத்தியானத்தில்

அருகே ஒருவரும் இல்லாத சமயம் பார்த்துத் தொழுவில் நுழைந்து, தமது கடத்திலிருந்த புனிததீர்த்தத்தை அவ்வெருதின் மேல் புரோக்ஷிக்க அதற்குப் பூர்வக்ஞானமும் வந்தது. உடனே அது எதிரில் நின்ற யோகீசுவரரைத் தன்தலையால் வணங்கி மனுஷ்யவாக்கினாற் பின்வருமாறு சம்பாஷித்தது:—"தேவரீர் குறித்ததினம் இஃதே. ஆயினும் தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. "கொடிது கொடிது வறுமை கொடிது" என்பார்க்கான எனதிரண்டு சண்டாளப்புத்திரர்களும் நான் தேடிவைத்தபொருளெல்லாவற்றையும் அழித்துவிட்டார்கள். இன்னும் ஒன்றிரண்டு வருஷங்களில் வறுமை மிகுந்திட்டுப் பிச்சையும் எடுப்பார்களென்பது திண்ணம். சுவாமின்! இந்நிலைமையில் நான் அவர்களுக்குச் சிலகாலம் உழுதுகொண்டிருந்தாலாவது அவர்கள் பொருள் சேகரித்துக்கொள்ளமாட்டார்களா என்கிற பேராவா என்னை விடுகின்றதில்லை. ஆதலால் தயவு செய்து இன்னும் சிறிதுகாலம் பொறுத்துக்கொள்ளப்பிரார்த்திக்கிறேன்"

அதனைச் செவியுற்ற கருணாநிதியாகிய அத்துறவி என்ன உபதேசஞ் செய்தாலும் உலகப்பொருள்களின்மேலுள்ள அடங்காப்பற்று அவனை விட்டகலவில்லையென்பதறிந்தும் அங்ஙனிடத்துள்ள கருணையினாற் சிலகாலம் கழித்து வருவதாகச் சொல்லி அகன்றனர்.

அப்பிரகாரமே குறித்தகாலத்தில் அம்மஹரிஷியவர் பழைய கடையைத் தேடிப் பார்க்கக் காணாமையால் அவர்கள் குடிசையை நோக்கிப்போகுங்கால் எலும்பும் தோலுமாயுள்ள ஒரு சுணங்கன் அத்தபசிமேல் விழுந்து குரைத்தது. உடனே அவர் அக்குடிசையிலுள்ளோரைக் கூவ, மூத்தமகன் வெளியில் வந்தான். அங்ஙனிடத்திற் குடும்ப க்ஷேமலாபங்களை விசாரித்துக் கடைசியாக உழுதுகொண்டிருந்த எருதைப்பற்றி வினவ, அவன் ஐயோ! அவ்வெருது இறந்து போய் ஒரு வருஷமாயிற்று. என்னபரிதாபம்! அந்தக்காளை யிருந்தவரையில் தீனமும் அதிகமாய்த் தின்னவில்லையென்றாலும் விடியற்காலத்தில் அவிழ்த்துவிட்டால் சாயங்காலமளவில் மிகப்பொறுமையுடன் உழுதுவிட்டுத்தான் திரும்பிவரும். அது மாதிரி மற்றொன்று கிடைப்பதரிது" என்று சொன்னான். அதுகேட்ட யோகீசுவரர் கடைக்காரன் என்ன ஜன்மம் எடுத்திருக்கிறானென்று தமது யோகக்கண்ணினாற் பார்த்தபொழுது அவன் சுவானமாக ஜனித்துத் தன் மக்கள் சொத்தில் ஒரு துரும்பேனும் பிறர் தொடக்கூடாதென்று அவ்வளவு ஊக்கமாய்க் காத்துக்கொண்டிருக்கிறானென்றும் தம்மேல்விழுந்து குரைத்த ஞமலி அவனேயென்று மதித்து, சமீபத்தில ஒருவருமில்லாத சமயம் பார்த்துத் தம்மிடத்திலிருந்த பரிசுத்ததீர்த்தத்தை யதன்மேல் தெளிக்க அதற்கு நல்லறிவு விளங்கிற்று. உடனே அச்சுணங்கன் முனிவருக்குத் தலைவணங்கித் தனது துரதிருஷ்டத்தின்பொருட்டுக் கண்களால் நீர் வடித்து, அப்பெரியோரை நோக்கி சுவாமின்! இப்போதிருக்கும் நிலைமையையும் தாங்கள் பார்க்கிறீர்கள். இக்குடிசையைச் சுற்றியுள்ளவர்கள் மிகக்கொடியவர்கள். நான் அந்நாளில் மிகக்கஷ்டப்பட்டு இச்சொத்தைச் சேர்த்தேன். என் குமாரர்களின் துர்நடத்தையாற் செலவானது போக பாக்கியிருக்கும் சொத்துக்களை திருடர்களுக்கு ஒப்புவித்துப்போட்டு வந்துவிடவனைக்கு மனம் வரவில்லை. ஆகையால் அடியேன்மேல் கிருபைகூர்ந்து இன்னுஞ்சில நாட் பொறுக்கக் கேட்டுக்கொள்கிறேன்" என்றது.

(இன்னும் வரும்)

சு. தி. ரா. சாம்பசிவசாஸ்திரியார்.

# FAMILY LIFE
## இல்வாழ்வியல்.

### பணம்.

#### அதன் மதிப்பு.

"அருளில்லார்க் கவ்வுலகமில்லை பொருளில்லார்க்
கிவ்வுலகமில்லாகியாங்கு"

என்றார் நாயனர். ஆதலின் இவ்வுலக இன்பம் பொருளின்றி அமையாதென்றேற்படு கின்றது. "பணமென்றாற் பிணமும் வாய்திறக்கும்" என்பர். ஆதலின் இவ்வுலகில் பணத்தை வேண்டாதார் ஒருவருமில்லை. அப்பணமோ எல்லா இன்பங்களுக்கும் காரணம என்பதிலும் தடையில்லை. ஆனால் அதன் தன்மையறிந்து தேடும் வகையிற் றேடி அனுபவிக்கும் வழியில அனுபவித்தால் மட்டும் அவ்வின்பம் சித்திக்கும். அன்றேல் அளவிறந்த அல்லலுக்கே காரணமாகும்.

நாம் உலகத்திலுள்ள தானியம் முதலிய பொருள்களை எல்லாம் பணத்தைக் கொண்டு மதிப்பிடுகின்றோம். அத்தானியாதிகளின் மதிப்பு எப்போதும் எவ்விடத்தும் ஒரே விதமாக இருக்கின்றதில்லை. ஓரிடத்தில் இருக்கும் விலை மற்றோரிடத்தில் மாறுகின்றது. ஒரு காலத்தில் இருந்த விலை மற்றகாலத்தில் இருக்கின்றதில்லை. நேற்று ரூபாவுக்குப் பத்துப்படி விற்ற அரிசி இன்று ஒன்பதே முக்காலவீதம் விற்பதைக் காண்கின்றோம். புதுப்பட்டியில் பத்துப்படி வீதம விற்கப்படும் அரிசி மற்றோரிடத்தில் ஒன்பதுக்குங்கூடக் குறைந்து விற்கப்படுதல் பிரத்தியக்ஷம். உலகத்தில் எல்லாப் பொருள்களும் இப்படியே காலந்தோறும் இடந்தோறும் ஏறியும் இறங்கியும் விற்கக் காண்கின்றோம். ஆதலால் அவற்றின் மதிப்பு நிலையாக இராமல் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றபடி மாறுபடுந்தன்மையுடையது என்பது நமக்குத்தெரியும். அவற்றை அளந்தறிய நமக்குக் கருவிகளாக இருக்கும் எண்ணல், எடுத்தல், நீட்டல், முகத்தல் என்னும் அளவைகள் மட்டும் எப்போதும் ஒரே நிறைதனவாக இருக்கின்றன. அந்த அளவைகளைப்போலவே பணமும் எப்போதும் ஒரே தன்மையதாக இருக்கின்றதென்று கருதுகின்றோம். ஆனல் உண்மையில் அது அப்படியல்ல; மற்றபொருள்களைப் போலவே பணமும் மதிப்பில் மாறுபடுகின்றது. நேற்று ரூபாவுக்குப் பத்துப்படி அரிசிவாங்கி, இன்று ஒன்பதேமுக்காலும்காலே ஒன்பதரையும் வாங்குவோமாயின் பணத்தின் மதிப்பு வரவரக்குறைந்துவருகின்றது என்பதில என்ன தடை? ரூபாவுக்கு நேற்றுப் பத்துப்படி வாங்குதற்கிருந்த யோக்கியதை இன்றில்லாமற்போய் இன்று ஒன்பதே முக்காலே வாங்கக்கூடியதாயிற்று. அதாவது நேற்றுப்பத்துப்படிக்குக்கிடைக்கக்கூடியதாக இருந்த ரூபா இன்று ஒன்பதே முக்காலுக்கே கிடைக்கக்கூடியதாக இருக்கின்றது. தஞ்சாவூரில் பத்துப்படிவிற்கும் அரிசி அதேகாலத்தில் மற்றோர் இடத்தில் ரூபாவுக்கு ஒன்பதரைப்படி வீதம் விற்கவும் காண்கிறோம். தஞ்சாவூரில் பத்துப்படிக்குக்கிடைத்த ரூபா மற்ற இடத்தில் ஒன்பதரைப்படிக்கே கிடைக்கிறது. ஆதலால் மற்ற பொருள்களைப்போலவே பணத்திற்குங்கூட காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றபடி மா

றந்தக்க மதிப்பே உண்டென்று ஏற்படுகின்றது. ஆதலின் பணமானது தன்னைக் கொண்டு மற்ற பொருள்களை வாங்குதலில் தனக்கிருக்கும் யோக்கியதையின் அளவுக்குத்தக்கபடி உயர்வுந்தாழ்வுமான மதிப்புடையதேயன்றி வேறில்லை என்பதையே சித்தாந்தமாகக்கொள்ளவேண்டும்.

## பண்டமாற்று.

உலகத்தில் எந்தப்பொருளுக்கும் அதுபெறுமான அளவேயன்றி அதிகம்கொடுக்கயாரும் இசையார்கள். நாம் ஒருவிதத்திலில்லாவிட்டால் மற்றொருவிதத்தில் ஏற்றவிலை கொடுத்தேயன்றி எந்தப்பொருளையும் பெறமுடியாது. வேடிக்கையோ அல்லது பயிற்சியோ கருதி ஒரு புத்தகத்தைப்படிக்கின்றோமென்று வைத்துக்கொள்ளுவோம். அப்படிப்படித்தலில் நமக்குண்டாகும் பயிற்சிமுதலியவற்றுக்குப் பிரதியாக நாம் பணத்தைக்கொடாவிட்டாலும் அருமைபொருளாகிய காலத்தைச் செலவிட்டோமென்பது நிச்சயமல்லவா? நமக்கு அந்தப்புத்தகத்தைப்படித்தால் கிடைக்கும் பயிற்சி முதலியவற்றின்மதிப்பானது அவற்றைப் பெறுதற்காகக் கழிக்கும் காலத்தின் மதிப்பினும் சிறந்திருக்கும்பக்ஷத்தில் காலமாகிய விலைதந்து அந்தப்பயிற்சி முதலியவற்றைப்பெறுதல் சரியே. ஏனென்றால் சிறியதைத்தந்து பெரியதைப்பெறுகின்றோமல்லவா? பணம், நண்பர், ஆரோக்கியம் முதலிய இவ்வுலகத்தில் நாம் விரும்பத்தக்க எந்தப்பொருளும் ஏதாவதொருவிதத்தில் விலைகொடுத்தன்றிப் பெறமுடியாது. ஆதலினால் நாம் விரும்புகிற பொருளின் அருமையும் அதைப்பெறுதற்காக நாம்கொடுக்கும் விலையின் தன்மையும் இன்னதென்பதைச்சரியாக அறிந்துகொள்ளவேண்டியது நமக்கு முக்கியமான கடமையாக ஏற்படுகின்றது. விரும்பும்பொருளினது விலையானது மிக அதிகமாக இருந்தால் நமக்கு நிர்வாகமில்லையென்று அதைப்பெறும் விருப்பத்தை யொழிக்கவேண்டும். குறைந்திருந்தால் வாங்கவேண்டும். நாம் வாங்க விரும்பும்பொருள் நல்லதாகவும் வேண்டத்தக்கதாகவும் மட்டும் இருந்தால் போதாது; அதைப்பெறுதற்குப் பிரதியாக நாம் எதைக்கொடுக்க வேண்டுமோ அதினும் அதிக நல்லதாகவும் வேண்டத்தக்கதாகவும் இருக்கவேண்டும். புத்தகங்கள் நல்லபொருள்கள்தாம். தடையில்லை. பதுமைகளும் அப்படியே. ஆரோக்கியகரமான வீடுகள் மிக அருமையானவையே. யாத்திரை அதிக பிரயோசனகரமானதே. இவைகளும் இவைகளைப்போன்ற வேறு பலவிஷயங்களும் விரும்பத்தக்கவைதான். ஆனால் அவற்றுக்கு விலையாகக்காலமோ பணமோ அல்லது இரண்டையுமோ கொடுத்தன்றி நாம் அவைகளைப்பெறமுடியாது என்பது நிச்சயம். அவை அடையத்தக்கனவா அல்லனவா என்பது அவை பெறுமானவையா அல்லவையா என்பதைப் பொறுத்த விஷயமாக இருக்கின்றது. அவை விரும்பத்தக்கவை என்பதில் தடையில்லை. ஆனால் அவற்றையடைதல் எல்லாருடைய நிலைமைக்கும் சாத்தியமல்ல என்பது நிச்சயம்.

இந்த நிச்சயம் மற்றபொருள்களின் விஷயங்களில் இருக்கின்ற விதமாகவே பணவிஷயத்திலும் இருக்கின்றது. பணம் பெறுமான வஸ்து என்பதில் தடையில்லை. இன்னும்பார்த்தால் அதற்கு அதிக மதிப்பு உண்டென்றும் உரைக்கலாம். ஆனால் எல்லாம் அதுவேயென்பது அதாவது அதற்காக எதையும் இழக்கலாம் என்பதுமாத்திரம் கூடாது. பணமுடையவராயிருப்பது நல்லதுதான்; ஆனால் ஒருவன் தன் ஆயுளில் தேடத்தக்கவஸ்து அதுவே என்றாதல் தேடத்தக்க சிறந்த பொருள்களுள் அதுமுக்கி

யமானதென்றால் கொள்ளுவது பெருந்தப்பு. தெய்வப்புலமைத் திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளிய மேற்குறித்த வாக்கியப்படி இவ்வுலக வாழ்க்கையை விரும்புகின்ற நம் ஒவ்வொருவருக்கும் பணம் இன்றியமையாப்பொருள்தான். ஆனால் அப்பொருளுக்கு ஒருவிதத்தில் இல்லாவிட்டால் மற்றொரு விதத்தில் விலைசெலுத்தியே பெறவேண்டியிருக்கின்றது; அப்படி விலைசெலுத்துவதில் ஒவ்வொருவருடைய சக்திக்கும் இவ்வளவுதான் செலுத்தி நிர்வகிக்கக்கூடும் என்பதற்கு ஒவ்வோரெல்லையிருக்கின்றது. நாம் ஒருபோதும் அவ்வெல்லையைக் கடக்கக்கூடாது. நாம் அணிந்திருக்கின்ற துணிமணிகட்கு எப்படி விலைகொடுத்துப் பெறுகின்றோமோ அப்படியே நாம்பெறுகின்ற பணத்துக்கும் விலைகொடுத்தே பெறுகின்றோம். ஒவ்வொருவரும் சிலவற்றைக் கைமுதலாக வைத்துக்கொண்டே வாழ்க்கையைத்தொடங்குகின்றார்கள், அவையாவன:—தேகபலம், ஆரோக்கியம், புத்தி, யாதோ ஒருதொழிலைச் செய்யத்தக்க சாதுர்யம், கல்வி, ஊக்கம பிதிரார்ச்சிதமாகக்கிடைத்த தனம் முதலியவைகளாம். இவைகளைக்கொண்டுதான் எவனும் உயிர்வாழ்க்கையில் விரும்பத்தக்கபொருள்களை அதாவது வீடு, விளைநிலம், புத்தகம், பணம் முதலியவைகளை வாங்கவேண்டியவனாக இருக்கின்றான். விவேகியாக இருப்பவன் மேற்காட்டிய பொருள்களில் எதற்கும் தன்சக்தியைமீறித் தன்னையுதலைக்கழிக்க நினையான். ஆனால் துர்ப்பாக்கிய வசத்தால் நம்முள் சிலர்க்குத்தான் இவ்விவேகம் இருக்கின்றது.

நம்முள் அநேகர் தங்களால் நிர்வகிக்கக்கூடிய சொற்ப சொத்துச்சுதந்தரங்களைக்கொண்டே சுகமாக வாழக்கூடுமென்பதைச் செவ்வையாகத்தெரிந்திருந்தும் மிதமீறி வேலை செய்து அவசியமில்லாத அளவு பணத்துக்காகத் தமக்கு இன்றியமையாத தேக ஆரோக்கியத்தையே விலையாகத்தந்து இழக்கின்றார்கள். இன்னும் சிலர் ஏதோ பகவானது திருவருளால் சுகமாக வாழ்ந்து காலங்கழிக்கத் தக்கதாக நியாயதுரந்தாதி தொழில்கள் செய்துவருந்தும் அதில் நியாயமானபடி வரும் பொருளில் திருப்தியின்றி அதிகத்திற் காசைப்பட்டுக் கைக்கூலி (லஞ்சம்) வாங்கத் துணிகின்றார்கள். இவர்கள் அவசியமில்லாத அளவு பணத்துக்காக அரும் பொருளாகிய ஒழுக்கத்தை விலையாக்தந்து இழக்கின்றார்கள்.

"ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்" என்றார்

நாயனார். (இன்னும்வரும்)

ச. திருச்சிற்றம்பலம்.

---

"ஒவ்வொருவனுடைய நடத்தையையும் சம்பாஷணையையும் நல்வழியில் மாற்றி, அவனுடைய கடமைகள் ஒவ்வொன்றையும் பரிசுத்தப்படுத்தி, பரத்தைக்கருதியே இகத்தில் யாவற்றையும் செய்யும்படி ஒவ்வொருவனுடைய இருதயத்திலும் சமயத்தைக் குடிபுகுத்த வேண்டியதிருக்கின்றது."

எஸ். ஏ. ஸ்டியன்தல்—(S. A. Steinthal.)

***

"திருப்தியே வாழ்க்கையின் ரசமாயிருக்கின்றது".

டிக்கன்ஸ். —(Dickens.)

# THE SAIVA SIDDHANTHAM.

## ஸைவசித்தாந்தம்

## பதிபசுபாசத்தொகை

[தொடர்ச்சி]

### மூன்றாவது பாசவியல்.

மூன்றாவதானே பாசவியல் கூறுகின்றார்.

"யானென் செருக்கா லிருவினையா மச்செருக்கு
மூனமலத் தாலா முயிர்க்கு"

இது ஆணவமலத்தின் உண்மை கூறுகின்றது.

(இ-ள்) உயிர்க்கு=ஆன்மாவிற்கு; யானென் செருக்கால்=நான் என்று சொல்லுஞ் செருக்கினால்; இருவினையாம்=நல்வினை தீவினைகளுண்டாம்; அச்செருக்கும்=அச்செருக்கும்; ஊனமலத்தால் ஆம்=கேட்டை விளைத்தற் குரிய ஆணவமலத்தினால் உண்டாம். (எ-று)

அநாதியே ஆன்மாவை பந்தித்துள்ள இவ்வாணவமலம் ஓர் சடவஸ்து. விஷம், கள், முதலியன ஆன்மாவை மயக்குவதுபோல், இதுவும் அதனைமயக்கும். கடவுள் இவ்வாணவமலத்தைத் தமது திரோதான சத்தியால் சேட்டிக்கின்றார். இது ஆன்மாவினுடைய இச்சா ஞானக்கிரியைகளை மிக மறைத்து நின்று அநேக விகாரங்களைச் செய்யும். இது ஆன்மாவினுடன் அபேதமாய் நின்று அதனைக் கேவல நிலையில் நிறுத்தும். இது அநுபவமாகிய போகத்தில் இச்சையை விரிவித்து நிற்கும். இது ஆன்மாவிற்குப் பக்குவம் வந்த போது தன் சத்தியிற் குன்றிநிற்குமே தவிர விட்டு நீங்காது. இது எட்டு முக்கியகுணங்களை யுடையதென உண்மை நூல்கள் கூறுகின்றன.

அவையாவன:—விகற்பம், கற்பம், குரோதம், மோகம், கொலை, அருர், மதம், நகை என்பனவைகளே. இக்குணங்களால் யான் என்கிற அகங்காரமும், அதனால்வினைகளும், அவ்வினைகளால் இன்பதுன்பங்களும் உண்டாம். இம்மூல மலம் தன்னுருவத்தைக் காட்டாது நின்று ஆன்ம ஞானத்தின்மேற் படர்ந்து அதனை ஈனமாகிய இடர்க்கடலின்கண் வீழ்த்தி நிற்குந்தன்மையது. ஆதலால் அதை ஊனமல மென்று கூறினார்.

ஊனம்=ஈனம்; கேடு, குறைவு.

"செம்பிற் களிம்பென்னச் சிவனேமுற்றதிமிர்
நம்பனைக்காட் டாதுயிரி னன்கு"

இது ஆணவமலத்தின் முக்கிய தன்மை கூறுகின்றது.

(இ-ள்) செம்பிற்களிம் பென்ன=செம்பினிடத்தே அநாதி சையோகமாய் நிற்கும் காளிதத்தைப்போல; சிவனேமுற்ற திமிர்=ஆன்மாவினோடு அநாதிசையோகமாய் நிற்கும் இருளாகிய ஆணவமலம்; உயிரில்=ஆன்ம அறிவில்; நம்பனை=தோன்றாத்துணையாய் வியாபித்திருக்கும் இறைவனை; நன்குகாட்டாது=சிறிதும் அறியுமாறு பிரகாசிப்பியாது. (எ—று)

ஒன்றாய், (முற்கூறியாங்கு) எண்ணிறந்த சத்திகளுடன் உயிர்களிடத்து அநாதியே வியாபித்து நின்று பல விகாரங்களைச் செய்யுமதாயுள்ள ஆணவமலத்திற்கு மறைப்பு

ஒன்றே முக்கியகுணம். அது ஆன்மாவுடன் பெத்த முத்திகளில் நீங்காதே இரண்டறக் கலந்து நிற்கும் தலைவனது தன்மையை அப்பிரகாசப்படுத்துமாதலால் "நம்பலை உயிரிலன்கு சுட்டாது" என்றார்.

இனம்பற்றி கன்மம், மாயைகளின் றன்மைகளையும் ஒரு சிறிது கூறுவாம்:— கன்மம், மாயை, ஆணவம் இவைகள் மும்மலமென்று அழைக்கப் பெறும். இவைகள் முறையே நெல்லுக்கு மூளை தவிடு உமிப்போல உயிரைப் பொருந்தி நின்று, போகமும் பந்தமும், போத்திருத்துவமும் பண்ணுவனவாம். எப்படியென்னில்:— நெல்லின்கண் ணுள்ள முளைத்தற் சத்தி முளையைத் தோற்றுவிக்குமாறுபோல உயிரின் கண் சுக துக்கங்களைத் தோற்றுவித்தல் கன்மமலம் போகம் பண்ணுதலாம். முளைத்தற்கு அநுகூலமாய்க் கூடி நிற்குந் தவிடுபோல, அச்சுகதுக்கங்கள் பொருந்தி நீற்றற் குரிமைக்கேதுவாய்த் தன் காரியமாகிய தநு கரண முதலியவற்றையும், உயிரையும் இடைவிடாது நிற்றல் மாயாமலம் பந்தம் பண்ணுதலாம்.

அம்முளை தோன்றுதற்கு நிமித்தகாரணமாய் நின்ற உமிப்போல, சுகதுக்கங்களுக்கு நிமித்த காரணமாய், அவற்றை முழுதுஞ் சூழ்ந்து உயிர் நுகருமாறு நிலைபெறச்செய்தல் ஆணவமலம் போத்திருத்துவம் பண்ணலாம்.

இம்மும்மலங்களைத் தவிர, ஆன்மாவின் அறிவு, இச்சை, செயல்களை ஏகதேசப்படுத்தும் மாயாகாரியமாகிய மாயேயமலம், இம்மும்மலங்களையுந் தத்தம் தொழிற்படுத்தி பாகம் வருவிக்கும் சிவசத்தியாகிய திரோதான சத்தி என்னும் வேறு இரண்டு மலங்களுமுள. பிறப்பு இறப்பு முதலிய யாவற்றிற்குங் காரணம் இவ்வைவகை மலங்களாம்.

இவற்றின் பரப்பையெல்லாம் விரிந்த நூலுட் கண்டுணர்க. இப்பாசவியலுள் ஆணவமலத்தை மாத்திரங்கூறி மற்றைய மலங்களைக் கூறாதுவிடுத்தது, முன் பதியியல் கூறு முகத்தால் "உரைத்தாம்" என்னும் உத்திகொண்டு போலும்.

(பாசவியல் முற்றிற்று)

ஆகச்செய்யுள் 19.

(இன்னும்வரும்)

S. பால்வண்ணமுதலியார்.

---

" அஸ்தமித்த போதிலும் சூரியன் ஒரே சூரியன் தான். நமது ஆத்மாவானது அழியாத்தன்மை யுடையதாய் நித்தியமா யிருக்கின்றதென்பது எனக்கு நன்கு விளங்கி யிருக்கின்றது."

கேயிடி. (Goethe.)

***

"பித்தர்களே! உங்களுடைய எண்ணங்களை அடைத்து வைத்திருக்கிற சிறைச்சாலையின் சுவர்களைப்பிளந்து தள்ளுங்கள். கடவுட்டன்மையை விசால மாக்குங்கள். அவரெங்கும் நிறைந்தவரென்று ஒப்புக்கொள்ளுங்கள். அல்லது அவர் இல்லையென்று மறுதலியுங்கள்" என்று டிடரோ. (Diderot) என்பவர் பிரஞ்சு தேசத்துப் பாதிரிகளிடம் கூக்குரலிட்டுக் கதறினார்.

***

"உசிதமாக ஜீவித்தல், மேன்மையாகக் கஷ்டத்தைச் சகித்தல், மிக்க ஆநந்தமோ டிறத்தல், இவைகட் கெல்லாம் நல்லவழிகளை நமது வேதம் கற்பிக்கின்றது"

பிளேவல். (Flavel)

# TO AVOID SQUABBLES IN TEMPLES.

## ஆலயக்கலக நிவாரணோபதேசம்.

பெருமாள் கோயில்களில் கலகங்கள் சம்பவிக்க இடங்கொடுக்கும் காரணங்களில் இரண்டு காரணங்களை இதுவரை எடுத்துக்காட்டினேம். அவையாவன:—பெருமாள் பிம்பங்களுக்கு தென்கலை நாமம் சாத்த வேண்டுமென்று தென்கலை வகுப்பாரும் வடகலை நாமம் சாத்த வேண்டுமென்று வடகலை வகுப்பாரும், சம்வாதஞ்செய்வதொன்று. குறித்த இருவகுப்பார்களுக்கும் மற்றுமுள்ள ஸ்மார்த்த மாத்துவ சைவர்களுக்கும் பொதுவான பெருமாள் ஆலயங்களில் அவரைச் சேவித்து அனுக்கிரகம் பெற வேண்டுமென்ற எண்ணத்துடன் வந்து கூடியிருக்கும் வடகலை தென்கலை ஸ்மார்த்த மாத்துவ சைவ புருஷிஷ்டமான சதசில் தென்கலை வகுப்புக்கு ஆசாரியரான மணவாள மாமுனியை மாத்திரம் ஸ்தோத்திரம் செய்யவேண்டுமென்று தென்கலையாரும் வடகலை வகுப்புக்கு ஆசாரியரான வேதாந்த தேசிகரை மாத்திரம் ஸ்தோத்திரம் செய்யவேண்டுமென்று வடகலையாரும் சம்வாதம் செய்வது மற்றொன்று.

இவ்வித வழக்கங்கள் சமீபகாலங்களில் உண்டானவையே தவிர புராதனங்களல்லவென்று எடுத்துக்காட்டினேம். தென்கலை குருபரம்பரையில் பட்டர் என்ற ஆசாரியர் கலி 4165—ல் அவதரித்து கலி 4191—ல் பரமபதம் சென்றதாய் சொல்லப்பட்டிருக்கிறது; அதாவது கி. பி. 1062 முதல் 1091 வரை இருந்ததாய் துலங்குகிறது. அவர் "சதாவம்" என்று ஆரம்பித்துச் செய்தருளிய ஸ்தோத்திரத்தில் "கஸ்தூரிகலிதோர்த்துவ புண்டரதிலகம்" என்று ஓர் சுலோகம் எழுதியிருக்கிறார். அதாவது "கஸ்தூரிக்காப்பினால் ஊர்த்துவ புண்டரதிலகம் இட்டு அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீ ரெங்கநாதன் திருமுக மண்டலத்தை என்று சேவிக்கப்பெறுவேன்" என்று பொருள் படுகிறது. இதனால் பட்டர் சுவாமிகளின் காலத்தில் ஸ்ரீ விஷ்ணு ஸ்தலங்களில் சிறந்ததான ஸ்வயம்வியக்தஸ்தலங்களில் முதன்மை பெற்ற ஸ்ரீ ரெங்கத்தில் பெருமாளுக்குத் தென்கலை வடகலை என்று சொல்லப்பட்ட பேதக்குறி ஒன்றுமில்லாதிருந்ததென்று வெளியாகிறது. இந்த ஆசாரியருக்குப் பின்னால் கலி 4370—ல் அதாவது கி. பி. 1269-ல் அவதரித்த வடகலை ஆசாரியரான வேதாந்த தேசிகர் "பகவத் தியான சோபான" மென்று ஸ்ரீ ரெங்கநாதன் விஷயமாய் எழுதிய ஓர் ஸ்தோத்திரத்தில் "காந்தம வக்த்ரம் கனகதிலகாலங் க்ருதம் ரங்கபர்த்து:" என்று ஓர் சுலோகத்தில் எழுதியிருக்கின்றனர். அதாவது "அழகுவாய்த்த திலகத்தினால் அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீ ரெங்கநாதனுடைய மனோக்கியமான நெற்றி" என்று பொருள்படுகின்றது. இதனால் வேதாந்த தேசிகர் காலத்திலும் ஸ்ரீ ரெங்கநாதன் முதலான விஷ்ணு மூர்த்திகளுக்குத் தென்கலையாவது வடகலையாவது நெற்றியில் இடப்படவில்லையென்று மத்தியஸ்தர்களான எல்லாருக்கும் ஸ்பஷ்டமாகிறது.

இது இவ்விதமிருக்க, பின்னிட்ட ஆசாரியர்களில் யாரோ ஒருவர் அல்லது அவர்களுடைய சிஷ்யர்களில் செல்வாக்காயிருந்தவர் யாரோ ஒருவர் பிரமாணங்களையும் முன்னனுஷ்டானத்தையும் தூரவிட்டு, தம் கக்ஷியில் அவருக்கிருந்த மட்டற்ற பற்றினால் தம் செல்வாக்கைச் சதமென்று நம்பி, தம்மை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்றும், அதனால் பெருமாளுக்கே அவமானம் விளைந்தாலும் அது திருணப் பிராயமென்றும், என்

ளி, தாம் நெற்றியில் இடப்பெற்ற சின்னத்தைப் பெருமான் நெற்றியிலும் ஏற்றிவிட்டனர்.

இதைப்பார்த்து மற்றக் கக்ஷியார் தமக்குச் செல்வாக்குள்ள இடத்தில் தாமும் பெருமான் நெற்றியில் தமது சின்னத்தையும் ஏற்றிவிட்டனர். அது முதற்கொண்டு பரம்பரையாய்த் தமிழ்நாட்டு எல்லாவிடங்களிலும் பெருமாளுக்கு இருகக்ஷியாரில் ஒருவர் அல்லது மற்றவர் அங்கீகரித்த சின்னத்தை இடலானார்கள். இன்னமும் பாடல் பெற்ற ஸ்தலங்களில் விஷ்ணு பிம்பங்கள் லோகத்தில் வார்க்கப்பட்டவைகளில் வார்ப்பிலாவது சிலையினால் செய்யப்பட்டவையில் சிலாமயமாயாவது தென்கலை வடகலை நாமங்கள் கிடையாது. ஆனால் பழையபிம்பங்கள் கழியக்கழிய புது பிம்பங்கள் நிர்மாணமாகும் காலங்களில் வார்ப்பிலேயும் சிலையிலேயுமே இனி தென்கலை வடகலை நாமங்கள் உண்டாய்விடும் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. இதனாலேயே நாமம் அமைந்த விக்கிரகங்கள் நூதனப்பிரதிஷ்டையென்பதும் பாடல் பெற்றவை யல்லவென்பதும் எளிதில் புலப்படும்.

பட்டர் நாளிலும் வேதாந்த தேசிகர்நாளிலும் இருந்தபடி கோவில்கள் பொதுவாகவே இன்னும் இருந்து வந்தால் அவை எவ்வளவு அழகாயிருக்கும். அஃதன்றிகலகக்காரன் ஒன்றை ஆரம்பித்து விட்டு ஒழிய அது மேலும் மேலும கலகத்துக்கு விளைநிலமாகி, ஒன்று பத்து நூற்றுக் கணக்காய்ப் பெருகி, கொழுந்துவிட்டு வளர்ந்து, பயிர்களைத் தன் செழிப்பினால் தலையெடுக்க ஒட்டாமல் கெடுக்கும் களைபோல கிளம்பி, கோயில்களில் பகவத்பக்தியும் பாகவத பக்தியும் உண்டாவதற்குப் பதிலாய் எதிர்க்கக்ஷியின் நாமத்தைத் தரிக்கின்ற பெருமானையும் எதிர்க்கக்ஷியில் சேர்க்கவும் பகவத்துவேஷமும் பாகவத துவேஷமும் எங்கும் மலிந்து கிடப்பதை நாம் பிரத்தியக்ஷமாய்க் காண்கின்றோம். சமீபத்தில் மைசூர் சமஸ்தானத்தில் மஹாராணியார் ராஜகுருபரகால ஜீயர் ஸ்வாமிகளிடத்தில் நாம விஷய ஆலயக்கலகம் தீரும் வழி என்னென்று கேட்டதில் பெருமாள்பிம்பத்துக்கு நாமம் எப்போதும் கிடையாதென்றும் திலகமே சாஸ்திர சம்மதமென்றும் பக்தவிக்கிரகங்களில் வடகலை ஆசாரியர்களுக்கு வடகலைத்திருமணும், தென்கலைஆசாரியர்களுக்குத் தென்கலைத் திருமணும், இருவருக்கும் பொதுவான ஆழ்வாராசாரியர்களில் பாதிப்பேர்களுக்கு வடகலைத் திருமணும் மற்றப்பாதிக்காரருக்குத் தென்கலைத் திருமணும் இம்படி சாசனம் அளிப்பது நடுநிலைமையாகுமென்றும் அவர்கள் சொன்னதாகவும் அதை மஹாராணியவர்கள் அனுசரித்து உத்திரவு பிறப்பித்திருப்பதாகவும் கேள்வியானோம். அவ்விதம் நடந்திருந்தால் மேற்கூறிய ஜீயர் ஸ்வாமிகளின் நீதி நிலைமையும் மஹாராணியவர்களுக்குப் பிரஜைகளின் க்ஷேமத்தில் இருக்கும் கவனமும் சிலாகிக்கத்தக்கனவே. இவ்வாறே புதுச்சேரி கோவில்களிலும் அனுஷ்டானம் நடந்துவருவதாய்ச் சொல்லப்படுகிறது. அப்படியாயின் இவ்வித ஒழுங்கு நம் நாட்டிலும் செய்யப்படின் உத்தமமாகும். ஆனால் அவ்வண்ணம் இந்திய அரசாங்கத்தார் தலையிட்டுச் செய்விப்பார்களென்று நம்ப இடமில்லை. ஜனங்கள் தாமே கூடி அவ்வித ஒழுங்கு செய்வித்து ஒற்றுமைப்படப்போகிறார்களா?

S. R. கிருஷ்ணமாசாரியார். B. A.

# THE TRUTH OF THE VEDANTA AND SIDDHANTA PHILOSOPHIES.

## வேதாந்த சித்தாந்தங்களி னுண்மை.

சிவபெருமான் ஆன்மாக்களின் பொருட்டு அருளிச் செய்த முதல் நூல்கள் 'வேதம்', 'ஆகமம்' என இரண்டாம். இவற்றுள் வேதம் கருமகாண்டம், ஞானகாண்டம் என இரண்டு காண்டங்களாகவும், ஆகமம் தந்திரகலை, மந்திரகலை, உபதேசகலை யென மூன்று கலைகளாகவும் விளங்குகின்றன. கருமத்தின் பலனும், ஞானத்துக்கேதுவான பத்தியை ஒரு காண்டமாகக் கொண்டு கருமகாண்டம், பத்திகாண்டம், ஞானகாண்டம் என வேதம் மூன்று காண்டங்களாக விளங்கு மென்றுங் கூறுவர். வேதத்தின் இம்மூன்று காண்டங்களுள், ஞானகாண்டமானது வேதாந்தம், வேதசிரசு, உபநிடதம், பிரபல்சுருதி யென்றும், ஆகமத்தின் உபதேசகலை சித்தாந்த மென்றும் அழைக்கப் பெறுவனவாம்.

சித்தாந்தத்தை சைவ சித்தாந்தமென்றுங் கூறுவர். இதனால் வேதாந்தம் சைவமல்லவென்பது கருத்தன்று. ஏனெனில், சைவம் சிவசம்பந்தம் என்று பொருள் தருமாதலானும், வேதாந்தத்தில் உபாசிக்கத்தக்க கடவுளும், வேதத்தை அருளிச்செய்ததும் "சிவம்" ஆதலானும், வேதாந்தம், வேதாந்திகள் முறையே சைவம், சைவர்கள் என்பது மறுக்கக் கூடாத விஷயம். இக்கருத்துப் பற்றியே,

"வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள் வேறுரைக்குநூலிவற்றின் விரிந்தநூல்க ளாதிநூலநாதியமலன்தருநூலிரண்டு மாரணநூல் பொதுசைவமருஞ் சிறப்புநூலா நீதியினுலகர்க்குஞ்சத்திநிபாதர்க்கு நிகழ்த்திய தன்மறையிறெழிபொருள்வேதாந்த தீதில் பொருள்கொண்டுரைக்கு நூல்சைவம்பிறநூ றிகழ்பூர்வஞ்சிவாகமங்கள்சித்தாந்த [மாகும்"

என சிவஞான சித்தியாரில் கூறியதுமாமென்க.

இவற்றுள் வேதத்தின் கருமகாண்டமும் ஆகமத்தின் தந்திரகலை மந்திரகலைகளும் சப்தத்தினும், கிரியையினும் பிரயோஜனத்தினும் பேதங்களாகவேயிருக்கும். இவைகளைப்பற்றி இங்கு கூறப்புகின், விரியுமாகலின், அவைகளை விடுத்து வேதத்தின் ஞானகாண்டமாகிய வேதாந்தமும் ஆகமத்தின் உபதேசகலையாகிய சித்தாந்தமும் எவ்வாறு விளங்குகின்றது என்பதைப்பற்றி விசாரிப்பாம்.

வேதாந்த சித்தாந்தமாகிய இவ்விரண்டும் சப்தத்தினும் கிரியையினும் ஒன்றுக்கொன்று முரணின்றி உடன் பாடாகவும் அபேதமாகவும் விளங்கும்.

எவ்வாறெனின் 'வேதாந்தம்' என்னும் சொல்லைப் பிரிப்போமாயின் வேதம், அந்தம் எனப் பிரியும். சித்தாந்தம் என்கிற பதத்திற்கு நிச்சயம் என்பது பொருள். அந்தம், நிச்சயம், முடிவு, உறுதி இவையெல்லாம் ஒரு பொருட் சொற்களாதலின், வேதாந்த சித்தாந்தத் துக்கு சப்தத்தினும் பேதமின்றென்பது பெற்றாம். இவ்வாறே முத்திருச் சாதனமாகிய கிரியையினும் முத்தியாகிய பிரயோஜனத்தினும் பேதமின்றென்பதை விளக்கிக்காட்ட வேண்டி முதலில் பந்த முத்திககு ஹேதுவாயுள்ள தோத்தத்தைப்பற்றி விசாரிப்பாம். (3)

### வேதாந்தம்.

பிரமம், ஈஸ்வரன், ஜீவன், அவித்தை, அவித்தைக்கும் சைதன்யத்துக்குமுள்ள சம்பந்தம், அநாதி வஸ்துக்களின் பேதம் என இவ்வாறும் சொரூபத்தினால் அநாதியாக இருக்கின்றன. மேற்கண்ட ஆறு வஸ்துக்களும் உற்பத்தியாகாதனவாயிருப்பதால் அவைகள் சொரூபத்தால் அநாதி. இவைகளில் பிரமம் மூன்று காலங்களிலும் பாதிக்கப்படாதபடியால் அநாதியாயும் அனந்தமாயுமிருக்கிறது. மற்றவை ஞானத்தால் பாதிக்கப்படுவதால் அநாதியாயும் அந்தத்தோடு கூடியதாயுமிருக்கின்றன. இவ்வாறு அநாதிவஸ்துக்கள் ஆறு என ஒப்புக்கொள்வதால் அத்துவிதத்திற்கு ஹானியின்று, எவ்வாறெனில் ஞானத்தினால் ஐந்து அநாதிகளும் பாதிக்கப்படுவதாலும், பாதிக்கப்படாத காலத்தும் பிரம சத்தியின்றித் தாமே விரியுந்தன்மையின்றாதலாலும் அத்துவிதம் சித்தித்ததாமென்க. இதனால் பிரமத்துக்கு மற்றவைகளை விகாரப்படுத்தும் ஒரு சத்தியுண்டென்று தோன்றுகின்றதல்லவா? அச்சத்தியினுண்மையால் பிரமத்துக்கு நிர்விகாரத்துவம் சித்திக்காதே. அங்ஙனமாயின் அத்துவிதம் எப்படிச் சித்திக்குமெனில், அக்கினியினிடத்திலிருக்கும் உஷ்ண சத்தியானது பிரகாசத்தைவிட வேறு பிரிந்து தோன்றாது, மற்றவர்களின் ஸ்பரிச உணர்ச்சியால பிரகாசத்துக்கு வேறாக உஷ்ணசத்தி ஒன்று உண்டென நிச்சயித்தலால் பிரகாசம் உஷ்ணம் என இரண்டு பொருளாகப் பிரிக்கலாவது, பிரகாசமே உஷ்ணம் உஷ்ணமே பிரகாசம் என ஒரு தன்மையாகலாவது இல்லாமலிருக்கிறது போல பிரமத்தினிடத்திலும் பிரமத்துக்கு வேறாகப்பிரிந்து தோன்றாமலும், அவித்தை, அவித்தியாசேதன சம்பந்தம், பேதமுதலியவைகளினாலே உண்டென்று ஒப்புக்கொள்கிற சத்தி பிரமத்தைவிட வேறில்லாமலும் பிரமமாந்தன்மையாய் ஒன்றாயில்லாமலுமிருப்பதால் பிரமத்துக்கு அத்துவிதம் சித்தித்ததாமென்க.

அத்துவிதமென்கிற பதத்துக்குப் பொருளென்னையெனில் அத்துவிதமென்பது ஒன்றென்று சிலரும் இரண்டல்லவென்று பலரும் கூறுவர். ஒன்றென்றால் ஒன்றென்பதற்கு ஏகமென்ற சப்தமிருக்க அதை உபயோகப்படுத்தாமல் அத்துவிதமென்று உபத்துணை வைத்தோத வேண்டியதின்றாகலின் ஒன்றென்பவர் மதம் மறுக்கப்படுகின்றது. இரண்டல்லவென்றால் இரண்டில்லாதவிடத்து ஒன்றுண்மையென யூகிக்கப்படுமாதலின் ஒன்றென்பவர் மதம்போல இரண்டென்பவர் மதமும் மறுக்கத்தக்கது. இங்ஙனமாயின் ஒன்றுமல்ல இரண்டுமல்லவென்பதே அத்துவிதத்தின் பொருளாமென்க.

இவ்வாறு அத்துவிதமாயும் அநாதியாயும் அனந்தமாயுமுள்ள பிரமத்தின் சத்தியால் அநாதியாயுள்ள அவித்தையாதிகள் ஞாதுஞேயமாகும் வரையும் சேஷ்டிக்கின்றன.

### சித்தாந்தம்.

பதி, பசு, பாசம், இம்மூன்றும் அநாதி. இவற்றுள் பதி ஒன்றினாலும் பாதிக்கப்படாமல் மூன்று காலத்தும் இருப்பதால் அநாதியாயும் அனந்தமாயும், பசு, பாசங்கள் ஞானத்தால் பாதிக்கப்படுவதால் அநாதியாயும் அந்தமாயுமிருக்கின்றன. பதியாகிய சிவபெருமானிடத்தில் அபின்னமாக திருவருளென ஓர் சத்தியுண்டு. அவ்வருட் சத்தியின் பிரேரணையால் பசுபாசங்கள் சேஷ்டிக்கின்றன. அந்தச் சேஷ்டிப்பில், சிருஷ்டி, திதி, சம்மாரம், திரோபவமென்னும் நான்கு கிருத்தியத்தினாலும் வேறுபட்டு

பக்குவப்படுத்துகிறது. அநுக்கிரகம் என்னும் கிருத்தியத்தால் சீவனுக்கு முத்திசித்திக்கிறது. திருவருட் சத்தியானது பந்தத்தில் சீவனுக்கு வேண்டிய போகானுபவத்தின் நிமித்தமாக பிரம, விஷ்ணு, ருத்திர, மகேஸ்வர மூர்த்தங்களாகவும் பந்த நீக்கத்தில் சதாசிவ மூர்த்தமாகவும் விளங்குகிறது.

இவ்வாறு சிவபெருமானிடத்தில் அத்துவிதமாயிருக்கும் அருட்சத்தியினால் சகல காரியங் செய்யப்படுகின்றன. இது பற்றியே,

"சிவனெனும் பொருளும் ஆதி சத்தியொடு
சேரில் எத்தொழிலும் வல்லதாம்
இவள் பிரிந்திடின் இயங்குதற்கும் அரிதரி
தெனமறை யுரைக்குமால்"

என சௌந்தரிய லகிரியிலும்,

"சத்திதா னதனாதி தானுருஞ் சிவமும் அத்தச்
சத்திதா னதியாகுந் தரும் வடிவான வெல்லாஞ்
சத்தியுஞ் சிவமுமாகும் சத்திதான் சத்தனுக்குச்
சத்தியாஞ் சத்தன் வேண்டிற் றெல்லாமாஞ் சத்திதானே"

என சிவஞான சித்தியாரிலும் கூறியது மாமென்க.

இனி வேதாந்த சித்தாந்தங்களில் முத்திக்குச் சாதனம் எவ்வாறிருக்கின்றன வென்பதைப்பற்றி விசாரிப்பாம்.

வேதாந்தத்தில் முத்திக்குச் சாதனம் யாதெனில் தத்துவஞானம், வாசனாக்ஷயம், மனோநாசம் என மூன்றும். இம்மூச்சாதனங்களும் வெகுகால பரியந்தம் சமமாக அப்பியாசிக்கப்பட்டால் முத்திசித்திக்கும். அப்படிக்கில்லாமல் ஒவ்வொரு காலத்தில் ஒன்றொன்றாக எவ்வளவு காலம் அப்பியாசித்தாலும் அதினால் முத்திசித்திக்காது. ஆனதால் இந்த மூன்றையும் வெகுகால மட்டுக்கும் சமமாக அப்பியாசிக்க வேண்டும். அப்படி அப்பியாசித்தால் அநாதி காலத்தைத் தொட்டுவந்த திடமாயிருக்கிற இருதயக் கிரந்தியை சேதித்து முத்திசித்திக்கும்.

(இன்னும் வரும்)

பொ. மு. முத்தையபிள்ளை.

---

"நமக்கு எவ்வளவு அறியாமையிருந்தாலும் அதிலும் கடவுள் இருக்கிறார். அவரை விசுவாசிப்பதால் நமக்கு அறிவு உடனே உண்டாகாவிட்டாலும் நம் மனம் சமாதானத்தை அடைகிறது"—வில்லியம்மௌண்ட்போர்ட். (William Mountford)

***

"என்றும் அழியாத நித்தியத்தை நம்பி சந்தோஷத்துடன் இவ்வாழ்க்கையை நீக்குகின்றேன். இந்நம்பிக்கை ஒவ்வொருவருக்கும் ஆனந்தத்தை விளைவியாமலிராது."
சாக்ரட்டிஸ். (Socrates)

***

"நல்லொழுக்கத்தாலன்றிச் சுகம் கிடைத்தலரிது."—மைண்ட். (Mind)

# STUDENTS' COLUMN.

## மாணவர் பக்கம்.

# DAKSHANAMURTHI SYMBOL.

## *தக்ஷிணாமூர்த்தி விக்ரஹம்

விக்கிரக ஆராதனை முதலியவைகள் நமது சித்தசுத்திக்காகவே முன்னமே ஏற்பட்டது. பின்பு அதை நன்றாய் விருத்திசெய்து அதிக உபயோகமுடையதாய்ச்செய்தார்கள் நமது முன்னோர்கள். அதாவது நாம் மேலேறுக்கிப்போகும்பொழுது நமக்குக் கொஞ்சம் ஆதாரமாயிருக்கும்படி விக்கிரக ஆராதனையைச் சற்று விருத்திசெய்தார். அது என்னவென்றால், மேலான உபநிஷத்வாக்கிய அர்த்தங்களை அவைகளில் அமைத்திருக்கிறார்கள். இவ்வர்த்தங்களைச் சற்றும் கவனிக்காமல் விக்கிரகாராதனை செய்தால் மனதை ஒன்றில் நிலைநிறுத்தும் சக்திவரும். மனதிலுள்ள மற்றைய எண்ணங்களெல்லாம்போய் அவ்விக்கிரக ஸ்வரூபமே மனதில் அமையும். மேலேறுக்கிச் செல்வதற்கு இது மாத்திரம் போதாது: மனதில் பிரம்மஞானம விருத்தியடைந்துகொண்டேயிருக்கவேணும். அதற்காகத்தான் உபநிஷத் அர்த்தங்களை விக்கிரகங்களிலமைத்திருக்கிறார்கள். ஆகவே அர்த்தத்தைக் கிரகித்துக்கொண்டு விக்கிரகத்தை ஆராதனை செய்தால், மனது ஒரு வஸ்துவில் நிலையாய் நிற்பதுமன்றி அத்துடன்கூட உபநிஷதர்த்தங்களும் மனதில் நன்றாய் ஊன்றிக்கொண்டு வரும். மனதை நிலை நிறுத்த நிறுத்த அதில் பிரம்மஞான ஏதுவாகிய மகா வாக்கிய அர்த்தங்களெல்லாம் பதிந்துகொண்டே வரும்.

முன் சொன்னபிரகாரம் பழகி கலங்கிலையடைவதற்குக் கோவிலிற்குப்போக வேண்டியது முதலில் அத்தியாவசியகம். "ஆலயந்தொழுவது சாலவுநன்று" என்பது சிறந்த உண்மைதான். இதன் உள் அர்த்தத்தை நோக்காது வெளியர்த்தத்தின்படியே முதலில் செய்யவேண்டியது அவசியம். இப்பொழுது சிவன்கோயிலுட்போகிறோமென்றுவைத்துக்கொள்வோம். அங்கு எவ்வளவோ நன்மையிருக்கிறது. அப்படித் தினம்போய்ப் பழகினால் மாத்திரந்தான் அதன் நன்மை நன்றாய் விளங்கும். கோயிலுட்போவதற்கு முன் அவசியமாய்வேண்டிய தென்னவென்றால் நல்ல நிலைமையடையவேண்டுமென்ற ஒரு அதிகமான ஆவல்தான் இது அத்தியாவசியகம். இது இருந்தால்தான் கோயிலிலுள்ள நன்மைகளை நாம் அடையக்கூடும். இல்லாவிட்டால் முடியாது. எனது குரு அடிக்கடி ஒரு வாக்கியமொன்று சொல்வதுண்டு. அதாவது:—தெருவில் எத்தனையோ பால்க்காரர்கள் "பால்வாங்கலில்லையோ பால்" என்று கூவிக்கொண்டுபோனபோதிலும் யாருக்குப் பால்அவசியமோ அவர்களே பாலையடைவார்கள்" என்பதே. இதே மாதிரியாகக் கோயிலுள் எவ்வளவு நன்மைகளிருந்தாலும் அங்கு சென்று அநுபவிப்பவர்கள் எவ்வளவு தான் அவைகளைப்பற்றிச் சொன்னாலும், அவைகளையடையவேண்டுமென்ற ஆவலுடையவனே அவைகளை அடைவான், மற்றவர்கள் அடையமாட்டார்கள். அப்படி பால் வேண்டாதவர்கள் பால் காரர்கள் எவ்வளவு கூவினபோதிலும் அப்பாலை அடைகிறதில்லையோ அப்படியே அவர்களும் அடையார்கள் ஆகவே நன்மை அடையவேண்டுமென்ற நல்ல ஆவல் இருந்தால் மாத்

*இவ்விக்ரஹம் இவ்விடம் ஆச்சிரம நிர்வாகிகளால் இதுவரைதனுபற்றி அச்சடிக்கப் படவில்லை. [ப ர்]

திரம்தான் கோயிலிலிருந்து நன்மையடையலாம்; மற்றெவ்விதத்தில் நன்மையடைய வேண்டுமானாலும் இந்த ஆவல் இருக்கவேண்டியது அவசியம்.

இந்த ஆவல் எம்மாதிரியாய் இருக்கவேண்டும் என்பதற்கு, உலகத்தில் எங்கும் சென்று திக்விஜயம் செய்து கொண்டுவந்த விவேகானந்த சுவாமிகள் ஒருகதை சொல்வதுண்டு. அதை உற்று நோக்கினால் ஆவல் எப்படி இருக்கவேண்டுமென்பது விளங்கும். அக்கதை பின்வருமாறு:— ஒரு சிஷ்யன் ஒருகுருவினிடத்திற் சென்று "எனக்கு நல்லநிலை (அதாவது பிரம்மநிலை) பெறவேண்டுமென்ற ஆவலிருக்கிறது. ஆகையால் எனக்கு அது சித்திக்கும்படி ஞானோபதேசம் செய்தருள வேண்டும்" என்று வேண்டிச் சொன்னான். குரு ஒன்றும் பேசாமல் மௌனமாயிருந்துவிட்டார். இச்சிஷ்யனும் பிரதிதினம் வந்து குருவை முன் சொன்னபடி பிரார்த்தித்துக் கொண்டு வந்தான். சிஷ்யனைப்பார்க்கிலும் அக்குரு நன்றாய்த்தெரிந்தவராகையால் பின்னும் மௌனமாய் இருந்து விட்டார். மிக உஷ்ணமாயிருக்கிற ஒருநாள் பார்த்துத் தனது சிஷ்யனை "நதியிற் சென்று நீராடி வருவோம் வருகிறாயா?" என்றார் சிஷ்யன் நல்லதென்று குருவின்பின் சென்றான். இருவரும் ஸ்நானத்திற்காகத் தண்ணீரிலிறங்கினார்கள். உடனே குருவானவர் சிஷ்யனுடைய காலைப்பற்றி நன்றாய் இழுத்துக்கொண்டு அவனைத் தண்ணீரடியிலே கொஞ்சநேரம் வைத்திருந்தார், சிஷ்யன் சிறிது நேரம் கஷ்டப்பட்டபிறகு அவனைவிட்டுவிட்டார். இருவரும் கரை ஏறினபின்னர் குரு சிஷ்யனைப்பார்த்து "அப்பா! நீ தண்ணீரடியிலிருக்கும்பொழுது உனக்கு எது அவசியமாய் வேண்டியிருந்தது?" என்று கேட்கச் சிஷ்யன் "கொஞ்சம் வாயுதான் அவசியமாய்வேண்டியிருந்தது" என்றான். உடனே குரு "எவ்வளவு ஆவலோடு அப்பொழுது வாயுவை விரும்பினாய் அப்பா! நீ அவ்வளவு ஆவலோடு பிரம்ம நிலையை விரும்பினாயானால் உனக்கு அது உடனே சித்திக்கும்" என்றார் அதுபோல் ஆவல் அதிகமாய் இருந்தால் உடனே நல்ல நிலையடையலாம். கொஞ்சம் ஆவலிருந்தாலும் ஆலயம்தொழுதல் அதனை விருத்திசெய்து முடிவில பிரம்ம நிலையையடையச்செய்யும்.

இங்ஙனமிருக்க அநேகர் கோவில் முதலியவைகளை அடியோடு எடுத்துவிடவேண்டுமென்று சொல்லுகிறார்கள் கோயிலில் ஏதாவது கெடுதலிருந்தால் அதைச் சீர்திருத்துவதாண்மையா அல்லது அதை அடியோடு எடுத்துவிடுவது ஆண்மையா? இருதிறத்தாருக்கும் கோயில் அவசியமில்லை. அவர்கள் ஞானிகள், மூடர்கள் எனப்படுவார். மற்ற யாவர்க்கும் கோயில் அத்தியாவசியம். ஞானிகள் மேல்நிலையை அடைந்தபோதிலும், அவர்களுக்குக் கோவில் அவசியம் இல்லையானாலும், தாம் இப்பொழுது இருக்கும் நிலைக்குக் கோவில் மூலமாய் வந்திருக்கிறோம் என்பதை நன்றாய் அறிவார்கள் ஆகவே மற்றவர்மேல் உள்ள கருணையாலே கோவிலைச் சீர்திருத்துவார்களேயல்லது, அதற்கு விரோதமாய் ஆரம்பிக்கமாட்டார்கள். மூடர்களோ ஒன்றும் தெரியாதவர்களாகையால் எதையும் தூஷிக்கத்துவக்குவார்கள். இதுதான் அவர்கள் தம்முள் வித்தியாசம். இப்பொழுது உள்ள கோவில்விரோதிகளை ஞானிகள் என்று சொல்வதற்கு இடமில்லை. மூடர்களோஎனின் முழுமூடர்களும் அன்று, மூடத்தனத்தால் சற்று மூடப்பட்டவர்கள். அப்படி நம் இந்துக்களில் மனதாரக் கோவிலைப் பழிப்பவர்கள் ஒருவரும் இருக்கமாட்டார்கள் எப்பொழுதாவது விதண்டா வாதத்திற்காக நம்மோர் இவ்வாறு பழிப்பாய் உரைப்பது வழக்கம்.

ஆகவே கோவிலுக்குப் போவது அவசியமென்பது நன்றாய் விளங்கும். பின்பு

சிவாலயத்திற்குள் போகும் ஒருவனைப்பற்றிச் சற்று விசாரிப்போம். முன் சொல்லப்பட்ட ஆவலைக் கொஞ்சமேனும் உடைத்தாயிருப்பவனானால், அவன் நன்மையடைவதற்கு அநேகவிடங்கள் கோயிலுள்ளே இருக்கின்றன. அவைகளுள் முக்கியமானவை மூன்று அவையாவன:— நடராஜசந்நிதி, தக்ஷிணாமூர்த்தி சந்நிதி, சிவலிங்க சந்நிதி இம்மூன்றும ஒருவனுக்குச் சிறந்த ஞானத்தையும் அதனால் சிறந்த ஆனந்தத்தையும் கொடுக்கும் இவைகளின் உள்ளர்த்தமென்ன? முன்பு நடராஜரைப்பற்றி எழுதியாய்விட்டது இப்பொழுது தக்ஷிணாமூர்த்தியை எடுத்துக்கொள்வோம்.

தாயுமானஸ்வாமிகள் பின்வரும் வாக்கியங்களில் தக்ஷிணாமூர்த்தியைப்பற்றி நன்றாய் எழுதியிருக்கிறார்.

"துக்கமிகு பக்குவச் சனகன்முதல் முனிவோர்கள்
தொழுதருகில் வீற்றிருப்பச்
சொல்லரிய நெறியையொரு சொல்லாலுணர்த்தியே
சொரூபானு பூதிகாட்டிச்
செங்கமல பீடமிசை கல்லால வடிக்குள்வளர்
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
சின்மயா னந்தகுருவே

இதன் உள்ளர்த்தத்தின் முக்கியமான விஷயத்தை சங்கராசாரியர் பின்வருமாறு வெளியிட்டிருக்கிறார். "குரு ஒருவர் ஒரு ஆலமரத்தின் அடியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அவருக்குச் சிஷ்யர் நால்வர். சிஷ்யர்கள் பெரியவர்கள், குருவோ சிறியவர். குருவோமௌனமாயிருக்கிறார். அதனாலேயே சிஷ்யர்கள் சந்தேகந்தெளிந்து ஆனந்தமுறுகிறார்கள்". இவை இரண்டும் தக்ஷிணாமூர்த்தி விக்கிரகத்தையும் அதன் உள்ளர்த்தத்தையும் நன்றாய் மனதிற்குக் கொண்டுவருகின்றன. இவை இரண்டையும் ஒட்டிப் பின்வரும் விவரங்களெல்லாம் நன்கு விவரிக்கப்படும்.

தக்ஷிணாமூர்த்தி பிம்பம் சிலசிலவிடங்களில் நடராஜ பிம்பம்போல இருக்கும் சில சிலவிடங்களில் மாறுபாடுகளுடையதாயுமிருக்கும். இவ் விக்கிரகமானது விளங்குகின்ற சடாமகுடம் ("சிரகிரி") தரித்த ஒரு மஹா புருடன் உருவாய்ச் செய்யப்பட்டு இருக்கிறது. இம்முனி ரூபம் குருவை உணர்த்துகிறது இக்குருவிற்குச் சிஷ்யர்கள் நான்குபேர், அவர்கள் பெயர், ஸநகர், ஸநந்தனர், ஸநாதனர், ஸநத்குமாரர்; இந்நால்வருக்கும் இக்குரு உபதேசம் செய்கிறார் இச்சிஷ்யர்கள் குருவைவிட மூத்தவர்கள். அதாவது அஞ்ஞானம் ஞானத்தைவிட முற்பட்டது. எனெனில், பிற்காலத்திற்றான் ஞானம் வருகிறது குருவோ மௌனத்தால் உபதேசிக்கிறார். அதாவது தாம் எப்படி ஒன்றையும் கவனியாமல் தேவத்தியானமாய், மௌனமாயிருக்கிறாரோ அப்படி அவர்களும் யாவற்றிலும் பற்றின்றி தியானபரராயிருத்தல் வேண்டும் என்ற நிவிர்த்தி தர்மத்தை மௌனத்தால் உபதேசிக்கிறார். இவ்வுபதேசத்தை அறிந்து சிஷ்யர்களெல்லாரும் சந்தேகம் தீருகிறார்கள்.

முன் சொன்ன வாக்கியங்களில் நன்றாய்க் கவனிக்கவேண்டியவை இரண்டுவிஷயங்கள். அவையாவன:— மௌனமாவது என்ன? மௌனத்தால் எவ்வாறு பிரம்மத்தை உணர்த்துவது? மௌனமின்னதென்பது விளக்கினால் பின் உள்ள கேள்வியும் நன்றாய்

விளங்கும். மௌனமென்பது அநேகவிதம். அவையாவன:—வாசாமௌனம், கிரியாமௌனம், சிரேஷ்டமௌனம். வாசாமௌனமாவது, வாக்கால் மாத்திரம் பேசாதிருத்தல். கிரியாமௌனமாவது காரியமாய் ஒன்றும் (கெட்டவைகளை) செய்யாதிருத்தல். இவைகளிலெல்லாம் மனதுமாத்திரம் துள்ளிக்குதித்துக் கொண்டேயிருக்கும். ஆகையால் இவைகளெல்லாம் அவ்வளவு சிரேஷ்டமான மௌனமல்ல. மனது இவைகட்கெல்லாம் காரணம். காரணத்தை வேரோடு கல்லினால் காரியம் தானே நழுவிவிடும். சிரேஷ்டமான மௌனமாவது இக்காரணத்தைக் கல்லுவதே. இது நன்றாய்ப் பொருள்படும் பொருட்டு எனது குரு ஒரு திருஷ்டாந்தம் சொல்வதுண்டு. அதாவது எரிகிற நெருப்பில் விறகுபோடப்போட நெருப்பு அதிகரிக்கும்; அவ்விறகு குறையக்குறைய நெருப்பும் குறைந்து கொண்டே வந்து முடிவில் லயமாய்விடும். அதுபோல இந்தமனதிற்கு விறகுக்குச் சமானமாகிய வெளிச் சஞ்சாரம் ஒடுங்க ஒடுங்க அதன் உக்கிரம் குறைந்து கொண்டேவரும். மனது தன் வேலைமுழுவதையும் விட்டபின் அடையும் நிலையே மௌனமெனப்படும் இதுவே சிரேஷ்டமௌனம். ஆகவே இந்தமௌனமே பிரம்ம நிலையில் கொண்டுசேர்க்கும் சிரேஷ்ட மௌனமே யாவற்றினிடத்தும் பற்றை விடுதல் அதாவது நிவிர்த்தி. ஆதலின் இம்மௌனத்தால் நிவிர்த்திதர்ம உபதேசஞ்செய்யலாம்.

(இன்னும் வரும்)

ஆ. சீ. க.

---

# RENUNCIATION.

## *வைராக்கியம்.

சம்சார வாழ்க்கையைப்பற்றி நினைக்க நினைக்க பயம் உண்டாகிறது. புண்ணியம் மிகுதியாயிருக்குமிடத்து, நீடித்த சுகானுபவம் உண்டாகும். சுகம் விசேஷமாயிருக்குங்கால், துக்கமும் விசேஷமாய் விளையும்.

* * *

உலக சுகங்கள், என்னவாயிருப்பினும், போகின்றனவே. அவைபோகும் வரையில் காத்திருந்தால் அளவிலாத்தாபத்தைத்தரும். நாமே ஓட்டிவிட்டால், "சாந்தி" என்னும் பேரானந்தமுண்டாகும்.

* * *

ஞானமுடையோனாயினும், அனுபவிக்கும் ஆஸ்தி முழுவதையும் பற்றில்லாமல் விடுவான். அநுபவமும் இனிவருமென்ற நம்பிக்கையுங்கூட அற்ற மற்றவர்களுக்கோ மனோராஜ்யத்தையும் விடுவது அரிதாயிருக்கின்றது.

* * *

மலை காடுகளில் வசித்துப் பரஞ்சோதியைத் தியானித்து ஆனந்தக்கண்ணீர் விடும் துறவிகள் மடியில் நிர்ப்பயமாய் படுத்திருக்கும் பட்சிகள் அக்கண்ணீரைக்குடிக்கின்றன; என்னபாக்கியம்! எப்பொழுதும் தோட்டம், துரப்பு, மாடி, மாளிகை, பாட்டுக்கூத்து இவைகளைத் தியானித்துப் பொழுதுபோக்கும் நாம் எங்கே?

* * *

---

* இந்த [illegible] பிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது

உருசையற்ற அன்னம் ஒருவேளை இரந்து புசிக்கினும், பூமியில் படுத்துறங்கினும், உடம்பன்றி மற்றொரு உறவினர் இல்லையாயினும், கட்டும் உடை கண்டவிடமெல்லாம் கிழிந்திருந்தாலும் அவனையும் விடாதே இவ்வாசை! மாம்சபிண்டங்களைத் தங்கக்குடங்களென்றும் கபத்தைக்கக்கும் முகத்தை, அமிர்தமயமான சந்திரனென்றும் கவிகள் பேருக்குச்சொல்லுவார்கள். துறந்தவனே இவ்வுலகஇன்பத்தையும்தெரிந்தவன்,

***

தெரியாமல் விளக்கிற்பூச்சி விளக்கையும், மீன் தூண்டியின் நுனியில் ஆகாரத்தையும் தேடுகின்றன. இதறிந்திருந்தும் மனிதன் தன்னைச் சிறையாக்கும் வலைய[illegible] காமடனைத்தேடுகிறான். மோகத்தின் மாயையை என்னென்று சொல்லுவோம்?

***

தாகத்தினால் முகம் சோஷிக்க, சுவையுள்ள தண்ணீரைக் குடிப்பான். பசியால் வருந்தினால், அசனத்தை உட்கொள்வான். காமத்தீ வாட்டினால், இல்லாளைச் சேர்வான். அந்த அந்த வியாதிகளைத் தீர்க்கும் மருந்தை, மதியற்ற மனிதன் சுகம் என்று பிரமிக்கிறான்.

***

“உயர்ந்த வீடு, நற்குணமுடைய பிள்ளைகள், அநுகூலமான மனைவி, அனந்தமான சம்பத்து, இளம்பிராயம் இவையெல்லாம் எமக்கிருக்கின்றன. எக்காலும் அனுபவிக்கலா”மென்று நினைந்து சுகிக்கிறான் இவையெல்லாம் கொடியில் போகின்றனவென்று அறிந்து துறக்கிறவனதே பாக்கியம்

A. ஸ்ரீநிவாசய்யர், B. A. B. L.

---

“ஓர் உருக்கு வாளானது ஞானியின் பரிசன வேதியால் தங்க வாளாக்கப்பட்டால் அது பளபளப்பை யுடையதாயிருந்த போதிலும் உருக்கு வாளைப்போல் ஒருவனைக் காயப்படுத்தக் கூடிய சக்தியில்லாததாய்விடுகிறது. இதே மாதிரியாக சர்வவல்லமையுள்ள கடவுளின் பாதத்தை ஒருதடவை யாவது இருதயத்தில் பதித்தவனுடைய வெளித்தோற்றம் மாறுபடாதிருந்த போதிலும் அவன் பிற்பாடு யாதொரு கெடுதியும் செய்கிறதே யில்லை”—ஸ்ரீ ராமகிருஷ்ணர் (Sree Ramakrishna).

***

‘சித்தன் அடைகிற ஸ்திதியெது? உருளைக்கிழங்கு அல்லது கத்திரிக்காய் சித்தனாகிறபோது அதாவது அவைவெந்திருக்கும்போது அதன்சத்துமெதுவாகவும் கனிவாகவுமாகிறது. அதேமாதிரியாக ஒருமனுஷன் சித்தனாகிறபோது அவனிடம் எல்லாத் தாழ்மையும் பட்சமுமிருக்கிறதாகக் காணப்படுகிறான்”.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் (Sree Ramakrishua).

***

“யாவனொருவன் உலகத்திலுள்ள ஜீவர்கள் மேலெல்லாம் அன்புடையனாய் அவர்க்கு நன்மை செய்வதே தொழிலாகக் கொண்டிருக்கின்றானோ அவனே சுகமடைகிறான்”.—மைண்ட் (Mind).

***

“அறிதல் ஓர்வித சக்தியாயிருக்கின்றது; கடத்தலோ மற்றொன்றாயிருக்கின்றது”.—மைண்ட் (Mind).